# වාර්ෂික වාර්තාව සහ ගිණුම්
# வருடாந்த அறிக்கையும் கணக்கும்
# ANNUAL REPORT AND ACCOUNTS

# 2021

## දේශීය ණය සහ සංවර්ධන අරමුදල
## உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம்
## LOCAL LOANS AND DEVELOPMENT FUND

**රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය**
**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

# உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

## ஆண்டு அறிக்கையும் கணக்கீடுகளும்

## 2021

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# உள்ளடக்கம்

பக்கம்

1. நோக்கு, செயற்பணி, நிதியம், தாபித்தல், குறிக்கோள்கள் 77
2. தாபனத் தகவல்கள் 78
3. ஆணையாளர் சபை 79
4. நிருவாக செயற்பாடு 81
5. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கருத்திட்டங்கள் 85
6. தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் பகுப்பாய்வு 88
7. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் 102

**நிதிசார் கூற்றுகள் மற்றும் தகவல்கள்**

8. கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை 106
9. விரிவான வருமானக் கூற்று 114
10. நிதிசார் நிலைமை தொடர்பான கூற்று 115
11. காசுப் பாய்ச்சல் கூற்று 117
12. கணக்கீட்டு குறிப்புகள் 120
13. கணக்கீட்டு கொள்கைகள் 144

# ஆண்டு அறிக்கை மற்றும் கணக்கீடுகள் - 2021

## உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி ஆணையாளர் சபை

## (உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்)

## 01. நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் நிதியம்

நோக்கு

உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு நிதி வசதிகளை அளிக்கும் பிரதான நிதி நிறுவனமாதல்மூலம் இந்த நாட்டில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

**செயற்பணி**

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு அத்தியாவசியமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு தேவையான நீண்டகால நிதி வசதிகளை வழங்கப்படுவதுடன், நிலைபேறுடனான மற்றும் சுயாதீன நிதி நிறுவனமாதல்.

**குறிக்கோள்கள்**

சட்டத்தால் அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளவாறு உள்ளூர் அதிகார சபைகள், பொதுசன பயன்பாட்டு சேவைகளை பேணிச்செல்வதற்கு முடியுமானவாறு சலுகை அடிப்படையில் நிதிசார் வசதிகளை அளித்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்.

**நிதியம்**

கடன் வழங்குவதற்கு தேவையான நிதியை, சலுகை வட்டி சதவீதத்தின் அடிப்படையில் மத்திய அரசின் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் நீண்டகால கடன் தொகையாக 2009 ஆம் ஆண்டு வரை பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் ஆசியா அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 1632 SRI (SF) இன் கீழ் நடைமுறைப்பட்ட நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு கருத்திட்டம், 2201 SRI (SF) இன்கீழ் நடைமுறைப்பட்ட

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்திட்டத்தின் நிதியத்தில் கடன் வழங்குதலுக்கு பயன்படுத்தப்படுகிறது.

# 02. தாபனத்தின் தகவல்கள்

தாபித்தல்

1916 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டு பின்னர், 1930 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க, 1931 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க, 1938 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க, 1942 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க கட்டளைச் சட்டங்கள் மற்றும் 1949 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க சட்டம், 1974 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1993 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க சட்டம் ஆகிய சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் நியதிச்சட்ட நிறுவனமாகும். இந்த நிறுவனம் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின்கீழ் இயங்கியதுடன், மீண்டும் 2022 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் நிருவகிக்கப்பட்டது.

**கடமைப் பொறுப்புகள்**

இலங்கையில் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் என்ற வகையில் தாபிக்கப்பட்டுள்ள 341 உள்ளூர் அதிகார சபைகளில் 340 (கொழும்பு மாநகர சபை தவிர்ந்த) இற்கான மூலதன முதலீடுகளின் பொருட்டு தேவையான நீண்டகால நிதி வசதிகளை சலுகை வட்டி அடிப்படையில் வழங்குதல் அடிப்படை கடமைப்பொறுப்பாகும்.

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட இடம் | இலக்கம் 24/A, வோட் ப்ளேஸ், கொழும்பு 07 |
| தொலைபேசி | 011-2687514 |
| தொலைநகல் | 011-2691261 |
| மின்அஞ்சல் முகவரி | lldf1916@gmail.com |
| **கணக்காய்வாளர்கள்:** | கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் |
| **உள்ளக கணக்காய்வு:** | உள்ளக கணக்காய்வுப் பிரிவு |
| | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| **வங்கியாளர்கள்**: | இலங்கை வங்கி |

**பணியாற்றொகுதி**

2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதியத்தின் பணிற்றொகுதி பின்வருமாறாகும்.

| **பதவி** | **2021.12.31 ஆந் திகதியில் பணியாற்தொகுதி** |
|---|---|
| பிரதான நிறைவேற்று அலுவலர் | 01 |
| பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிருவாகம்) | 01 |
| பிரதிப் பணிப்பாளர் (தொழிற்பாட்டு) | 01 |
| உதவி கணக்காளர் | 01 |
| நிருவாக அலுவலர் | 01 |
| அபிவிருத்தி அலுவலர்கள் | 19 |
| முகாமைத்துவ உதவியாளர் | 10 |
| சாரதி | 02 |
| அலுவலக பணியாளர் | 02 |
| **மொத்தம்** | **38** |

# 03. ஆணையாளர் சபையின் அமைப்பு

1993 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி (திருத்தம் செய்யப்பட்ட) சட்டத்தில் 2 ஆம் இலக்கம் பிரகாரம் ஆணையாளர் சபை கௌரவ அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்படும் ஆகக்குறைந்த 13 உறுப்பினர்களைக் கொண்டமைதல் வேண்டும்.

(அ) தலைவர் - உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர்
(ஆ) நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் ஒருவர்
(இ) ஒவ்வொரு மாகாண சபைகளிலும் ஆளுநர்களால் பெயரிடப்படும் 09 அரச அலுவலர்கள்
(ஈ) கௌரவ அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் மூன்று பேர்

## 2021.12.31 ஆம் திகதியில் ஆணையாளர் சபை

### தலைவர்

01. திரு.ஆர்.எம்.பீ.ரத்நாயக்க – பொது திறைசேரியின் பிரதிப் பணிப்பாளர், நிதி அமைச்சு

### திறைசேரி பிரதிநிதித்துவம்

02. திருமதி.ஏ.ஏ.அய்.பீ.அதிகாரி - பிரதிப் பணிப்பாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், நிதி அமைச்சு

### உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 03 | திரு.காமிணி ராஜரத்ன | பிரதான செயலாளர் | (மத்திய மாகாணம்) |
| 04 | திரு.எச்.எம்.பீ.பண்டார | பிரதான செயலாளர் | (வட மத்திய மாகாணம்) |
| 05 | திரு.பீ.பி.விஜயரத்ன | பிரதான செயலாளர் | (ஊவா மாகாணம்) |
| 06 | திருமதி.சுனில் ஜயலத் | பிரதான செயலாளர் | (சப்ரகமுவா மாகாணம்) |
| 07 | திரு.துசித் பீ வனசிங்க | பிரதான செயலாளர் | (கிழக்கு மாகாணம்) |
| 08 | திரு.ஆர்.சீ த சொயிஸா | பிரதான செயலாளர் | (தென் மாகாணம்) |
| 09 | திரு.பீ.பி.எம்.சிறிசேன | பிரதான செயலாளர் | (வடமேல் மாகாணம்) |
| 10 | திருமதி.ஜயந்தி விஜேதுங்க | உள்ளூராட்சி ஆணையாளர் | (மேல் மாகாணம்) |
| 11 | திரு.எம்.பீ.திரன்ஜன் | உள்ளூராட்சி ஆணையாளர | (வட மாகாணம்) |
| 12 | திரு.டப்ளியு.பி.எம்.ஆர்.எஸ்.ஏ.அளுவிகாரே | கௌரவ அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட | |
| 13 | திரு.ஏ.டி.கே.குருகே | கௌரவ அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட | |
| 14 | திரு.ஏ.பி.ஹேரத் | கௌரவ அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட | |

# 04. நிருவாகச் செயற்பாடு

நிறுவனத்தின் நிருவாக செயற்பாடு ஆணையாளர் சபைமூலம் நடைமுறைப்படும் இணைந்த செயற்பாடு என்று கூறலாம். நிருவாக முறையில் முக்கிய அம்சமான, நிறுவனத்தின் இணைந்த வெற்றி தொடர்ச்சியான பொருளாதார நிலைப்பாட்டுக்கு சாதகமாக அமைகின்றது. உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் ஆணையாளர் சபை, இணைந்த நிருவாக செயற்பாட்டினை நடாத்திச் செல்வதன்மூலம் வியாபார ஒழுக்கநெறிகள், வெளிப்படைத்தன்மை மற்றும் உயர் பொறுப்பு நிலைமைகளை பேணிச் செல்வதற்கு பொறுப்பாக உள்ளது.

## ஆணையாளர் சபை

### அமைப்பு

ஆணையாளர் சபையானது, தலைவர் அடங்கலாக பதின்நான்கு பேர்களை கொண்டமைந்துள்ளதுடன், அவர்களின் விசேட அறிவு மற்றும் அனுபவம் நிறுவனத்தின் வியாபார செயற்பாடுகளுக்கு உதவியாக அமைகின்றன. ஆணையாளர் சபையின் உறுப்பினர்கள் எவரும் நிறுவனத்துடன், கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பு கொள்வதில்லை என்பதுடன், அது அவர்களின் கடமைகளை நிறைவேற்றும்போது சுயாதீனத்தைப் பேணிச் செல்வதற்கு சாதகமாக அமைந்துள்ளது.

### தீர்மானமெடுத்தல்

ஆணையாளர் சபையின் உறுப்பினர்கள் தேவைக்கமைவாக ஒரு மாதத்திற்கு ஒருமுறை கூடுவதுடன், அதன்போது அன்றாட நடவடிக்கைகளை ஆய்விற்கு உட்படுத்துவதுடன், மிகவிசேடமான கொள்கை முறையிலான தீர்மானங்களும் மேற்கொள்ளும். மேலும் ஆணையாளர் சபை உறுப்பினர்களால் தாபனத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு ஏற்புடையதான உபாய வழிமுறைகளையும் தீர்மானிக்கப்படுகிறது.

### பொறுப்பு

1. தாபனத்தின் பலம், வினைத்திறமை மற்றும் இடர் என்பவற்றை கருத்தில்கொண்டு வியாபார மூலோபாயங்களை தயாரித்தல்
2. மேற்படி மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
3. தற்போதுள்ள முறைமையில் செயற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இடர் முகாமைத்துவம், உள்ளக நிருவாகம், ஒழுக்க நெறிகள், தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் நியதிச்சட்டங்களுக்கு ஒழுங்கமைவதற்கு பொறுப்பு கூறுதல்
4. மூலதன செலவுகளின் அவதானிப்புகள், மேற்பார்வையிடல் மற்றும் மீளாய்வுகளை மேற்கொள்ளுதல்
5. சிரேஷ்ட முகாமைத்துவத்தின் செயலாற்றுகைக் கண்காணிப்பு.
6. தகவல் முறைமை மற்றும் கணக்காய்வு செயற்பாட்டைப் பயனுள்ளவாறு நடைமுறைப்படுவதற்கு பொறுப்பாக இருத்தல்.

**சுயாதீன தீர்ப்பு**

ஆணையாளர் சபையின் செயற்பாடுகளின்போது ஒவ்வொரு ஆணையாளர்களும் தமது சுயாதீன கருத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பதுடன், ஏனைய தரப்புகளின் சட்ட விரோதமான தாக்கங்கள் அல்லது பாதகமான தாக்கங்களுக்கு உட்படுதலாகாது. மூலோபாயங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுதல், மூலோபாயங்களை அமுல்படுத்தல், செயலாற்றுகையின் மீளாய்வு, வளங்களை விநியோகித்தல் மற்றும் வியாபார ஒழுக்க நெறிமுறைகளை பேணுதல் போன்ற நடவடிக்கைகளின் பொருட்டு ஆணையாளர்களின் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**தலைவர்**

தலைவர் அவர்களின் கடமைப்பொறுப்புகளை விபரமளிக்கப்பட்டு, பிரித்து காட்டப்பட்டுள்ளதுடன், அதனால் தாபன சட்டகத்தினுள் அதிகார சமநிலைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு இயன்றுள்ளமையால், நபர்களின் தனி விருப்பம் பிரகாரம் தீர்மானமெடுக்கம் தன்மை வரையறுக்கப்பட்டுள்ளது.

**தலைவர் அவர்களின் கடமைப்பொறுப்பு**

ஆணையாளர் சபைக்கு தலைமைத்துவம் வழங்குதல், மூலோபாயங்கள் தொடர்பான வழிகாட்டல் எல்லா வகையிலுமான கூட்டங்களை தொழில்சார் முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக செயற்படல் என்பன தலைவர் அவர்களால் மேற்கொள்ளல் வேண்டும்.

**ஆணையாளர் சபை நியமனம் செய்தல்**

ஆணையாளர் சபை நியமனம் செய்கின்ற நடைமுறைத் திட்டம் மிக தெளிவானதாகவும், வெளிப்படைத்தன்மையுடன் உள்ளதுடன், அதனை சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டத்தின்படி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**கணக்காய்வு மற்றும் பொறுப்பு**

**தாபனத்தின் தன்மை மற்றும் எதிர்காலத்தை மதிப்பிடல்.**

தேசிய சம்பள மற்றும் பணியாற்றொகுதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடன் இந்த நிறுவனத்தின் எதிர்கால நோக்கத்தின்படி அரச துறையில் ‘‘சீ’’ வகுப்பின் நிறுவனமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, நிறுவனத்தின் பணிற்றொகுதியினரை மீள்கட்டமைவு செய்யப்பட்டுள்ளது.

**சிறந்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை பேணிச் செல்லுதல் மற்றும் இடர் முகாமைத்துவம்**

ஆணையாளர்களால் அமுல்படுத்திய உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம்மூலம் நிறுவனத்தின் முதலீடுகளையும் சொத்துக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளில் நிலவும் உள்ளார்ந்த குறைபாடுகள் காரணமாக ஏற்படும் பிழைகள் மற்றும் மோசடிகள்

தொடர்பாக ஆணைக்குழு அறிந்துக்கொள்ளக் கூடியவாறு முறைமையொன்று நடைமுறைப்படுகின்றது.

**உள்ளக நிருவாக முறைமைகளில் பொருண்மையான தன்மை மற்றும் பயன்தரும் தன்மை பற்றி முன்னராக மேற்கொண்ட புலனாய்வுகள்**

ஆணையாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களால் மேற்கொண்ட புலனாய்வுகளை சார்ந்து உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளில் பொருண்மையான தன்மை மற்றும் பலன்தரும் தன்மை தொடர்பாக அவதானிப்புகளை நிருவாகச் சபையிடம் அனுப்பி வைப்பதுடன், நிருவாகச் சபையால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**நிதிக் கூற்றுகளை அறிக்கையிடல்**

நிருவாகச் சபையின் ஆணையாளர்களால் நிறுவனத்தின் நிதி கூற்றுகளை இலங்கை நிதி அறிக்கையிடல் கணக்கீட்டு தரநியமங்களுக்கு (SLFRS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தப்படுவதுடன், நிதி கூற்றுகளை பதிவு செய்தலானது, தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் நடைமுறை நெறிமுறைகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று நிதி கூற்றுகள் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தப்படுகிறது.

**தொடர்ச்சியான நிலைப்பாடு**

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் உரிய திரவத் தன்மையின்கீழ் அதன் வியாபார நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பராமரிக்கின்றது.

**நியதிச்சட்ட முறையிலான பொறுப்புகள்**

ஆணையாளர்களால் அவர்களின் அறிவு மற்றும் நம்பிக்கை என்பவற்றுக்கு அமைவாக அரசாங்கத்துடன் உள்ள நிதிசார் பொறுப்புகள் மற்றும் சட்டவாக்க முறையில், ஊழியர்களின் பொறுப்புகளுக்கு உரியவாறு கொடுப்பனவுகளை மேற்கொண்டுள்ளமை அல்லது அது தொடர்பாக போதியவு ஒதுக்கீடுகள் நிறுவனத்தின் நிதி கூற்றுகளில் ஏற்பாடு செய்துள்ளமை தொடர்பாக திருப்தியடைகின்றது.

**ஏனைய தரப்புகளுடன் உள்ள தொடர்பு**

**ஊழியர்கள்**

நிருவாகச் சபையால் தயாரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் நோக்கு மற்றும் குறிக்கோள்கள் தொடர்பாக நிறுவனத்தின் எல்லா அலுவலர்களும் அறிந்துள்ளனர். ஆகக் குறைந்த வயதெல்லைக்கு குறைவான எந்தவொரு நபருக்கும் நிறுவனத்தில் வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவில்லை. நிறுவனத்தின் வேலை வாய்ப்புகள் மற்றும் தரமுயர்வுகள் என்பவற்றுக்கு இனம், பால்வேறுபாடு ஆகிய வேறுபாடுகள் கவனத்திற்கு உட்படுத்துவதில்லை

**ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள்**

பொது திறைசேரி, சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றுடன் அர்த்தமுள்ள தொடர்பினை பேணுவதற்கு நிருவாகச் சபை உறுதியளித்துள்ளது. நிறுவனத்தின் தன்மை மற்றும் செயற்பாடு என்பன சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்மூலம் வழங்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைகள் என்பவற்றை உரியவாறு பின்பற்றியதன்மூலமும் நாட்டில் நிலவும் சட்டங்களுக்கு இணங்கியதன்மூலமும் எய்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**சுற்றாடல்**

நிறுவனம் மற்றும் அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட உடன்பாடுகளை உபயோகப்படுத்துவதன்மூலம் சுற்றாடல் முறைமையை உரியவாறு பேணிச்செல்லுதல் தொடர்பாக நிருவாகச் சபையால் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

**நிலையான அபிவிருத்தி இலக்குகள்**

2017 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க நிலையான அபிவிருத்தி சட்டம்மூலம் சட்டமயமாக்கப்பட்டுள்ள சகச்சிர அபிவிருத்தி இலக்குகளை இனம் காணப்பட்டு அந்த இலக்குகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு செயற்றிட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 05. ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்திட்டங்கள்

**ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 1632 SRI (SF) - (UDLIHP)நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு கருத்திட்டம்**

நகர அபிவிருத்தி அமைச்சின்கீழ் 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்திய மேற்படி கருத்திட்டத்தின்கீழ் வழங்கிய கடன் மீள அறவிடும் நிறுவனமாக உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் நடைமுறைப்படுகின்றது. இக் கருத்திட்டத்தின்கீழ் 27 உள்ளூராட்சி நிறுவனங்களின் பொருட்டு வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி ரூபா மில்லியன் 2,270 ஆகும். இந்தக் கருத்திட்டங்களுக்கிடையில் 90% கடன் அறவிடப்படுவதுடன், எஞ்சிய கருத்திட்டங்களின் கடன்களை மீள அறவிடுதலில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதற்கு பிரதான காரணம் யாதெனில், இக் கருத்திட்டத்தின்கீழ் நிருமாணிக்கப்படும் வர்த்தக தொகுதிகள் வெற்றியளிக்காமையும், ஏனைய சில கருத்திட்டங்கள் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளமையுமாகும்.

**அட்டவணை இலக்கம் 5.1 கடந்த 05 ஆண்டுகளுக்கு கடன் அறவிடல் முன்னேற்றம் (UDLIHP)**

ரூபா.மில்லியன்

| ஆண்டு | கடன் தவணை அறவிடுதல் | வட்டி அறவிடுதல் |
|---|---|---|
| 2017 | 74.0 | 68.3 |
| 2018 | 84.5 | 67.6 |
| 2019 | 96.0 | 68.1 |
| 2020 | 100.9 | 62.0 |
| 2021 | 107.8 | 58.0 |

**ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இலக்கம் 2201 SRI (SF) – (LGIIP)**

**உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம்0**

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் **2201** SRI (SF) கடன் இலக்கம் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கடன் வழங்குதல் மற்றும் அந்தக் கடனை மீண்டும் அறவிடும் பணி உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் ஆசிய அபிவிருத்தி வங்கி, உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் என்பவற்றுக்கிடையில் கருத்திட்டங்களின் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது. மேற்படி கருத்திட்டத்தின்கீழ் நகர உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை நகர சேவைகளை

மேம்படுத்தல் மற்றும் விரிவான பணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன்கீழ் 05 பிரதான துறைகளை அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. கிராமிய நீர் வழங்கல்
2. உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய வீதி அபிவிருத்தி
3. திண்ம கழிவுபொருட்களின் முகாமைத்துவம்
4. நகர்புற நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு முறைமை அபிவிருத்தி
5. சிறிய அளவிலான சமூக உட்கட்டமைப்பு வசதிகள் (அடிப்படை சுகாதார க்ளினிக் மற்றும் நூலகம் என்பன)

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுமூலம் மேற்படி கருத்திட்டக்களை வழிநடாத்தியதுடன், உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கடன் வழங்குதல் மற்றும அந்தக் கடனை மீள அறவிடும் பணியை உள்ளூர் கடன் மற்றும் அவிவிருத்தி நிதியத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தொகை அமெரிக்க டொலர் 42.5 அமெரிக்க மில்லியனாகும். இது 100% ஆன கடன் தொகையாக உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெறுவதுடன், 08 ஆண்டு சலுகை காலத்துடன் 32 ஆண்டுகளில் பொது திறைசேரியிடம் மீண்டும் செலுத்தப்படல் வேண்டும். சலுகை காலப் பகுதியில் வட்டி வீதம் 1% ஆவதுடன், சலுகை காலத்தின் பின்னர் 1.5% ஆகும்.

இந்தக் கருத்திட்டத்தின்கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் வழங்கிய கருத்திட்டத்திற்காக கடன் மற்றும் அளிப்புகள் என்ற வகையில் 02 பகுதிகளாகும். உள்ளூராட்சி நிறுவனங்களில் வகைப்படுத்தலின்படி கடன் தொகை 33% தொடக்கம் 53%வரையாவதுடன், அளிப்பு 40% தொடக்கம் 60% வரையாகும். மேற்படி அளிப்பானது செலவிட வேண்டியிருப்பது 9% ஆன வட்டி தொகையை கொண்டாகும். இதன் படி இந்தக் கருத்திட்டத்தின்கீழ் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் மிக பாரிய வருமுன் இழப்பு நிலையை வகிக்க வேண்டியுள்ளது.

உப கருத்திட்டங்களின் ஆற்றல் உள்ளூராட்சி நிறுவனங்களின் எதிர்கால வருமானங்களின்மீது தீர்மானிக்கப்படும். நிதி, உள்ளூராட்சி செயற்றிட்டம் மற்றும் ஆற்றல் அபிவிருத்தி செயற்பாடுகள் அத்தியாவசிய அம்சங்களாவதுடன். குறித்த அம்சங்கள் நடைமுறைப்படுவதன்மூலம் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் அறவிடப்படும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன், கடன் தவறவிடும் வருமுன் இழப்பு நிலை குறைவாக அமையும். அவ்வாறே கடன் மீள செலுத்தல் உரியவாறு நடைபெறுவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களில் நிதி நிலைமை வலுவானதும் நிலையானதுமாக இருத்தல் வேண்டும். அதே போல் நிதியத்திலிருந்து மீண்டும் கடன் பெற்றுக்கொள்வதற்காக குறித்த ஆற்றல் முக்கியமாகும். உள்ளூராட்சி வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டங்களின் நோக்கங்கள் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

இந்தக் கருத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் வழங்கிய கடன் மற்றும் அளிப்புகளின் பெறுமதி ரூபா.மில்லியன் 4,654 ஆவதுடன், உளளூராட்சி அதகிார சபைகளின் வகைபடுத்தலின் படி கடன் மற்றும் அளிப்புகள் வழங்கியுள்ள முறை பின்வருமாறாகும்.

அட்டவண இலக்கம் 5.2 : **உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் கடன் மற்றும் அளிப்புகள் பகிர்நதுள்ள முறை (LGIIP)**

| **உள்ளூர் அதிகார சபைகளின் வகை** | **கடன் தொகை** | % | **அளிப்பு** | % | **மொத்தம்** | % |
|---|---|---|---|---|---|---|
| மாநகர சபைகள் | 254 | 53 | 192 | 40 | 433 | 93 |
| நகர சபைகள் | 263 | 43 | 306 | 50 | 543 | 93 |
| பிரதேச சபைகள் | 1,291 | 33 | 2,348 | 60 | 3,678 | 93 |
| மொத்தம் | 1,808 | | 2,846 | | 4,654 | |

அட்டவணை இலக்கம் **5.3** : கடந்த 05 ஆண்டுகளில் கடன் அறவிடும் முன்னேற்றம் (டுபுஜஜீ)

(ரூபா.மில்லியன்)

| **ஆண்டு** | **கடன் தவணை அறவிடல்** | **வட்டி அறவிடல்** |
|---|---|---|
| 2017 | 143.7 | 99.3 |
| **2018** | 162.9 | 91.2 |
| **2019** | 181.8 | 77.5 |
| **2020** | 186.2 | 62.5 |
| **2021** | 176.6 | 46.3 |

# 06. தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் செயலாற்றுகை

## 6.1 தொழிற்பாட்டு செயலாற்றுகை

### 2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

2021 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கடன் வழங்குவதற்காக ரூபா. மில்லியன் 800 ஆன தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டில் 19 உள்ளூராட்சி நிறுவனங்களிடம் வழங்கிய மொத்த கடன் பெறுமதி ரூபா. மில்லியன் 848 ஆகும். இந்த கடன் தொகை சலுகை வட்டி அடிப்படையில் 5-10 ஆண்டுகளில் மீண்டும் செலுத்தப்படல் வேண்டும். கடந்த 05 ஆண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் அதிகளவிலான கடன் விடுவித்தல் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டு குறித்த ஆண்டிலயே கடன் விடுவிக்கப்பட்ட அளவு 50% ஆகும். கடன்களின் வருமுன் இழப்பை முகாமைத்துவம் செய்தல், கடன் மீள அறவிடும் முறைமை மற்றும் கருத்திட்டங்களில் நிதிசார் சாத்தியவளத்தை அடிப்படையாகக் கொண்டு கடன் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆகையால் இவ்வாண்டில் கடன் தொகையில் 98% வருமான உற்பத்தி கருத்திட்டங்களாவதுடன், 2% ஐ சமூக நலனோம்பல் கருத்திட்டங்களாக வகைப்படுத்தப்படலாம்.

அட்டவணை இலக்கம் 6.1.1 2021 ஆம் ஆண்டில் கடன் வழங்கியதன் சாராம்சம் பின்வருமாறாகும்.

| | **கருத்திட்டங்களின் வகை** | **வட்டி வீதம் (வருடாந்தம்)** | **தொகை (ரூபா)** | **கருத்திட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | பொதுச் சந்தை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டங்கள் | 7.0% | 42,896,000 | 01 |
| 2 | பொதுச் சந்தையை நிருமாணித்தல் | 7.9% | 733,989,758 | 10 |
| 3. | அலுவலக கட்டிடங்கள் மற்றும் பொது நூலகங்களை நிருமாணித்தல் | 7.0% | 31,274,912 | 04 |
| 4 | சூரிய மின்கல அமைப்பு | 7.0% | 28,388,768 | 02 |
| 5 | வீதிகளின் பராமரிப்பு அலகுகளை தாபித்தல் | 7.9% | 10,000,000 | 01 |
| 6 | கலி பவுசர் கொள்வனவு செய்வதற்காக | 7.9% | 1,356,000 | 01 |
| 7. | மொத்தம் | | **847,905,438** | **19** |


கடன் வழங்குதல் - 2021.12.31 ஆம் திகதியில்
4%
3%
1%
5%
87%
සතිපොළ සංවර්ධනය කිරීමේ ව්‍යාපෘති
පොදු වෙළඳපළ ඉදිකිරීම
කාර්යාල ගොඩනැගිලි සහ මහජන පුස්තකාල ඉදිකිරීම
සූර්ය කෝෂ පද්ධති සවිකිරීම
මාර්ග නඩත්තු ඒකක පිහිටුවීම

அட்டவணை இலக்கம் 6.1.2 : உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

**2021.12.31ஆந் திகதியில் கடன் வழங்குதல் சாராம்சம்**

| | உள்ளூராட்சி நிறுவனம் | மாகாணம் | தொகை (ரூபா) | பொதுச் சந்தை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டங் கள் | கழிவு முகா-மைத்துவ கருத்திட்டங்க ளின் பொ-ருட்டு கலிபவுசர் களை கொள்வனவு செய்தல் | சூரிய மின்கல முறைமை கள் | வீதி அபிவி-ருத்திக்கு தேவையான இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல் | பொது வர்த்தக தொகு தியை நிருமாணித்த ல் | அலுவலக கட்டிடங்கள் மற்றும் பொது நூலகங்களை நிருமாணித்த ல |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | கட்டான பி.ச | மேல் மாகாணம் | 1,623,000 | - | - | - | - | - | 1,623,000 |
| **2** | புத்தளம் ந.ச | வடமேல் | 65,440,000 | - | - | - | - | 65,440,000 | - |
| **3** | கொடகவளை பி.ச | சப்ரகமுவா | 42,896,000 | 42,896,000 | - | - | - | - | - |
| **4** | குளியாபிட்டிய ந.ச | வடமேல் | 197,449,148 | - | - | - | - | 197,449,148 | - |
| **5** | பெந்தோட்ட பி.ச | தென் | 13,983,912 | - | - | | - | - | 13,983,912 |
| **6** | குருணாகல் மா.ந.ச | வடமேல் | 24,000,000 | - | - | 24,000,000 | - | - | - |
| **7** | பொல்கஹவளை பி.ச | வடமேல் | 20,000,000 | - | - | - | - | 20,000,000 | - |
| **8** | குருணாகல் மா.ந.ச | வடமேல் | 375,850,000 | - | - | - | - | 375,850,000 | - |
| **9** | கெக்கிராவ பி.ச | வட மத்திய | 11,375,000 | - | - | - | - | - | 11,375,000 |
| **10** | அக்குரஸ்ஸ பி.ச | தென் | 4,388,768 | - | - | 4,388,768 | - | - | - |
| **11** | பானந்துரை பி.ச | மேல் மாகாணம் | 20,000,000 | - | - | - | - | 20,000,000 | - |
| **12** | குளியாபிட்டிய பி.ச | வடமேல் | 4,293,000 | - | - | - | - | - | 4,293,000 |
| **13** | கெஸ்பாவ ந.ச | மேல் மாகாணம் | 10,000,000 | - | - | - | 10,000,000 | - | - |
| **14** | நீர்கொழும்பு மா.ந.ச | மேல் மாகாணம் | 38,840,000 | - | - | - | - | 38,840,000 | - |
| **15** | பெந்தோட்டை பி.ச | தென் | 7,250,000 | - | - | - | - | 7,250,000 | - |
| **16** | நாரம்மல பி.ச. | வடமேல் | 1,356,000 | - | 1,356,000 | - | - | - | - |
| **17** | கேகாலை பி.ச | சப்ரகமுவா | 860,610 | - | - | - | - | 860,610 | - |
| **18** | உடபத்தாவ பி.ச | வடமேல் | 3,500,000 | - | - | - | - | 3,500,000 | - |
| **19** | அயகம பி.ச | சப்ரகமுவா | 4,800,000 | - | - | - | - | 4,800,000 | - |
| | மொத்தம் | | **847,905,438** | **42,896,000** | **1,356,000** | **28,388,768** | **10,000,000** | **733,989,758** | **31,274,912** |

அட்டவணை இலக்கம் 6.1.3 **உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் கடன் வழங்குதல் - மாகாணங்களின்படி**

**2021 அம் ஆண்டு**

| மாகாணம் | தொகை (ரூபா) | சதவீதம் (%) |
|---|---|---|
| மேல் மாகாணம் | 70,463,000 | 08 |
| வடமேல் | 691,888,148 | 82 |
| சபிரகமுவா | 48,556,610 | 06 |
| தெற்கு | 25,622,680 | 03 |
| வடமத்திய | 11,375,000 | 01 |
| மொத்தம் | **847,905,438** | **100** |




உருவப்படம் 6.1.3 மாகாணங்களின் படி கடன் வழங்குவதில் முன்னேற்றம்

அட்டவணை இலக்கம் 6.1.4 : **கடன் வழங்குதல் - 2021 ஆம் ஆண்டு**

**உள்ளூராட்சி நிறுவனங்களின் வகைப்படி**

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகைப்படி | தொகை (ரூபா) | சதவீதம் (%) |
|---|---|---|
| மாநகர சபை | 438,690,000 | 52 |
| நகர சபை | 272,889,148 | 32 |
| பிரதேச சபை | 136,326,290 | 16 |
| மொத்தம் | 847,905,438 | |




**உருவப்படம் 6.1.4 உள்ளூர் அதிகார சபைகளின் வகைப்படி கடன் வழங்கும் முன்னேற்றம்**

**கடன் மீள அறவிடுதல்**

2021 ஆம் ஆண்டில் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் சுழற்சி நிதியத்திலிருந்து வழங்கிய கடன் தொகையில் கடன் தவணை தொகையாக ரூபா. மில்லியன் 498.8 ம், வட்டி தொகையாக ரூபா.மில்லியன் 168.4 ம், உள்ளூராட்சி சபைகளிடமிருந்து மீண்டும் அறவிடப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற வீடமைப்பு கருத்திட்டங்களுள் ரூபா. மில்லயின் 107.8 ஐ கடன் தவணையாகவும், ரூபா. மில்லியன் 58.0 ஐ வட்டியாகவும், அறவிடப்பட்டுள்ளது. பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின் ஊடாக ரூபா. மில்லியன் 2.7 ஐ கடன் தவணையாகவும், ரூபா.மில்லியன் 3.8 ஐ வட்டியாகவும் அறவிடப்பட்டுள்ளது. உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் ரூபா மில்லியன் 176.6 ஐ தவணையாகவும், ரூபா.மில்லியன் 46.3 ஐ வட்டியாகவும் மீள அறவிடப்பட்டுள்ளது.

அட்டவணை இலக்கம் 6.1.5: கடன் மீள அறவிடல் முன்னேற்றம் - (ரூபா.மில்)

| | தவணை அறவிடல் | வட்டி அறவிடல் | மொத்தம் |
|---|---|---|---|
| **LLDF** | **498.8** | **168.4** | **667.2** |
| **PCDP** | **2.7** | **3.7** | **6.4** |
| **UDLIHP** | **107.8** | **58.0** | **165.8** |
| **LGIIP** | **176.6** | **46.3** | **222.9** |
| **மொத்தம்** | **785.9** | **276.4** | **1062.3** |







உருவப்படம் 6.1.5 கடன் தவண மற்றும் வட்டி தொகை அறவிடும் சதவீதம்

## உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்
## அட்டவணை இலக்கம் 6.1.6
## செயலாற்றுகை 2017 - 2021
## (ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்திட்டங்களை தவிர்ந்த)

(ரூபா.000)

| ஆண்டு | வழங்கிய கடன் | கடன் தவணை அறவிடல் | கடன் வட்டி அறவிடுதல் |
|---|---|---|---|
| **2017** | 403,477 | 205,621 | 123,938 |
| **2018** | 403,141 | 250,880 | 90,470 |
| **2019** | 652,381 | 241,004 | 107,627 |
| **2020** | 614,336 | 328,177 | 130,502 |
| **2021** | 847,905 | 498,813 | 168,477 |




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| Loans Granted | 403,477 | 403,141 | 652,381 | 614,336 | 847,905 |
| Recovery Capital | 205,621 | 250,880 | 241,004 | 328,177 | 498,813 |
| Recovery Interest | 123,938 | 90,470 | 107,627 | 130,502 | 168,477 |

உருவப்படம் 6.1.6 செயலாற்றுகை 2017 -2021

## நிதி செயலாற்றுகை

### வருமானம் - 2021 ஆம் ஆண்டு

ஆண்டுக்குள் உழைத்துக் கொள்ளப்பட்ட வருமானம் ரூபா.மில்லியன் 149 ஆகும். (ஆசிய அபிவிருத்தி கருத்திட்டங்கள்மூலம் வழங்கப்பட்ட கடன் தொகையும் அடங்கலாக) நிறுவனத்தின் நிருவாக செலவுகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் உள்ளூர் அதிகார நிருவனங்களிடம் வழங்கப்பட்டுள்ள அளிப்புகளை ஒதுக்கிய பின்னர், வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா.மில்லியன் 87.3 ஆகும். (புத்தகங்களில் சீராக்கப்பட்ட அளிப்புகளின் பகுதி ரூபா.மில்லியன் 74 ஆகும்) மேலும் 2021 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்ட கடன் நட்டத்தின் பெறுமதி ரூபா.மில்லியன் 9.9 ஆகும்.)

**அட்டவணை இலக்கம் 6.2.1 கடந்த 05 ஆண்டின் நிதிசார் மீளாய்வு**

ரூபா.000

| விபரம் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | | | | | |
| வட்டி வருமானம் | 404,872 | 400,599 | 266,181 | 274,899 | 275,545 |
| திறைசேரி கடன் வட்டி | (138,318) | (137,858) | (134,813) | (131,744) | 126,304 |
| மொத்த வருமானம் | 266,554 | 262,741 | 131,367 | 143,154 | 149,240 |
| ஏனைய வருமானம் | 3,526 | 2,221 | 133,929 | 86,101 | 63,434 |
| மொத்த தொழில்பாட்டு வருமானம் | 270,080 | 264,962 | 265,290 | 229,255 | 212,674 |
| கடன் நட்டஈட்டு பெறுமதிகள் | (34,760) | 4,583 | 4,687 | 7,646 | 9,956 |
| தேறிய தொழில்பாட்டு வருமானம் | 304,842 | 260,378 | 260,607 | 221,610 | 202,718 |
| நிருவாக செலவுகள் | (46,531) | (40,393) | (41,073) | (38,151) | (40,505) |
| உள்ளூராட்சி நிறுவனங்களிடம் விசேட அளிப்புகள் (Grant Amortization) | (245,395) | (187,976) | (153,588) | (115,998) | (74,910) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 12,916 | 32,008 | 65,948 | 67,460 | 87,303 |
| வருமான வரி செலுத்தல் | (3,168) | (593) | (3,274) | (2,495) | (16,237) |
| தேறிய இலாபம் | 16,083 | 32,601 | 69,222 | 69,955 | 71,066 |
| விரிவான வருமானம் சீராக்கியதன் பின்னர் தேறிய இலாபம் | 15,814 | 32,803 | 69,385 | 69,122 | 67,821 |
| ஆண்டு இறுதியில் பிடிபண உழைப்புகள் (உரித்துகள்) | (276,095) | (243,042) | (176,018) | (105,196) | (37,315) |

**பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல்**

2021 ஆம் ஆண்டில் உள்ளூர் நிதியத்தின் பொருட்டு கடன் தவணைகள் மற்றும் வட்டி தொகை முறையாக ரூபா மில்லியன் 18.3 மற்றும் ரூபா. மில்லியன் 7.2 பொது திறைசேரியிடம் மீள செலுத்தப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் வீடமைப்பு கருத்திட்டத்தின்கீழ் ரூபா.மில்லியன் 88.6 ஐ கடன் தவணையாகவும், ரூபா.மில்லியன் 66.6 ஐ வட்டியாகவும், பொது திறைசேரியிடம் மீள செலுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் ரூபா.மில்லியன் 146.2 ஐ கடன் தவணையாகவும், ரூபா.மில்லியன் 48.5 ஐ வட்டியாகவும், பொது திறைசேரியிடம் மீள செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின் பொருட்டு ரூபா.மில்லியன் 2.8 ஐ கடன் தவணையாகவும், ரூபா மில்லியன் 3.8 ஐ வட்டியாகவும் மீள செலுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை இலக்கம் 6.2.2 : திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல் முன்னேற்றம் - 2021

| | தவணை செலுத்தல் | வட்டி செலுத்தல் | மொத்தம் |
|---|---|---|---|
| **LLDF** | 18.3 | 7.2 | 25.5 |
| **PCDP** | 2.8 | 3.8 | 6.6 |
| **UDLIHP** | 88.6 | 66.6 | 155.2 |
| **LGIIP** | 146.2 | 48.5 | 194.7 |
| **மொத்தம்** | **255.9** | **126.1** | **382.0** |






## உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

அட்டவணை இலக்கம் 6.2.3 : **பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல் 2017 – 2021**

ரூபா மில்லியன்

| ஆண்டு | தவணை | | | | வட்டி | | | | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | LLDF | PCDP | UDLIHP | LGIIP | LLDF | PCDP | UDLIHP | LGIIP | |
| 2017 | 21.6 | 4.62 | 74.0 | 16.7 | 13.5 | 1.9 | 68.3 | 36.8 | 237.4 |
| 2018 | 21.3 | 2.13 | 73.6 | 20.6 | 11.9 | 4.4 | 64.1 | 26.3 | 224.3 |
| 2019 | 21.1 | 2.3 | 90.8 | 80.6 | 10.3 | 4.2 | 76.2 | 43.9 | 329.4 |
| 2020 | 20.6 | 2.5 | 87.7 | 121.0 | 8.8 | 4.0 | 78.3 | 47.4 | 370.3 |
| 2021 | 18.3 | 2.8 | 88.6 | 146.2 | 7.2 | 3.8 | 66.6 | 48.5 | 382.0 |
| **மொத்தம்** | 102.9 | 14.35 | 414.7 | 385.1 | 51.7 | 18.3 | 353.5 | 202.9 | 1543.4 |

LLDF உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின்மூலம் வழங்கிய கடன் தொகை

PCDP பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை

UDLIHP நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானம் வீடமைப்பு கருத்திட்டம்

LGIIP உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம்



**அட்டவணை இலக்கம் 6.2.4 பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல்**

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

**2017 – 2021**

**ரூபா.மில்லியன்**

| ஆண்டு | தவணை | வட்டி |
|---|---|---|
| 2017 | 21.6 | 13.6 |
| 2018 | 21.3 | 11.9 |
| 2019 | 21.1 | 10.3 |
| 2020 | 20.6 | 8.8 |
| 2021 | 18.3 | 7.2 |




உருவப்படம் 6.2.4 – பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல் (LLDF)

### அட்டவணை இலக்கம் 6.2.5 -பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல்

பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டம் (PCDP)

**2017 – 2021**

**ரூபா. மில்லியன்**

| ஆண்டு | தவணை | வட்டி |
|---|---|---|
| 2017 | 4.62 | 1.9 |
| 2018 | 2.13 | 4.4 |
| 2019 | 2.33 | 4.2 |
| 2020 | 2.5 | 4.0 |
| 2021 | 2.8 | 3.8 |




உருவப்படம் 6.2.5 பொது திறைசேரியிடம் கடன் மீளசெலுத்தல் (PCDP)

அட்டவணை இலக்கம் 6.2.6 **பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல் 2017- 2021**

**நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு கருத்திட்டம் (UDLIHP)**

**ரூபா.மில்லியன்**

| ஆண்டு | தவணை செலுத்தல் | வட்டி செலுத்தல் |
|---|---|---|
| 2017 | 74.0 | 68.3 |
| 2018 | 73.6 | 64.1 |
| 2019 | 90.8 | 76.2 |
| 2020 | 87.7 | 78.3 |
| 2021 | 88.6 | 66.6 |




உருவப்படம் 6.2.6 – பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல் (UDLIHP)

### அட்டவணை இலக்கம் 6.2.7 -பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல் 2017–2021 உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் கருத்திட்டம் (LGIIP)

ரூபா.மில்லியன்

| ஆண்டு | தவணை செலுத்தல் | வட்டி செலுத்தல் |
|---|---|---|
| 2017 | 16.7 | 36.8 |
| 2018 | 20.6 | 26.3 |
| 2019 | 80.6 | 43.9 |
| 2020 | 121.0 | 47.4 |
| 2021 | 146.2 | 48.5 |




உருவப்படம் 6.2.7 - பொது திறைசேரியிடம் கடன் மீள செலுத்தல் (LGIIP)

# 07. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை – 2021

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 41 ஆம் பிரிவு பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை தாபிக்க வேண்டுமென்பதுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு பிரதான கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் பொறுப்புகளுக்கு உட்படுவார்கள். 2010.12.14 ஆம் திகதிய அரச பொது முயற்சி சுற்றுநிருப பீ.ஈ.டீ./55 பிரகாரம் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் ஆணையாளர் சபையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்று தரத்தில் அல்லாத இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் அடங்கலாக மூன்று பேர்களைக் கொண்டு கணக்காய்வு குழு அமைந்துள்ளது. ஆணையாளர் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் பொது திறைசேரி பிரதிநிதியாளர் அதன் தலைவராகவும், கணக்காய்வாளர் திணைக்களத்தின் பிரதிநிதியாளர் அவதானிப்பாளராகவும் பங்குபற்றுவார்கள்.

**(01) 2020 ஆம் ஆண்டில் நிதி கூற்றுகள்**

2020 ஆம் ஆண்டில் இறுதி கணக்குகள் மீளாய்வு மற்றும் அவதானிப்புகள் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**(02) 2020 ஆம் ஆண்டில் இறுதி கணக்குகளின் மீளாய்வு மற்றும் அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**

2020 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுகள் அடங்கலாக அதன் நடவடிக்கைகள் தொடர்பாக தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்காய்வு அறிக்கை மீளாய்வுக்குட்படுத்தியதுடன், அதன்மூலம் எழுந்துள்ள விடயங்களை செவ்வையாக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை நிறுவனத்திடம் முன்வைக்கப்பட்டது.

(அ) நிறுவனத்தின் பணிப்பாளர் பதவி

2010 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நிறுவனத்தில் பணிப்பாளர் பதவிக்காக பதில் கடமையாற்றும் நியமனம் தொடர்ச்சியாக இடம்பெறுவதால், பணிப்பாளர் பதவிக்கு நிரந்தர அலுவலரை ஆடசேர்ப்புச் செய்வதற்கு முடியுமான வகையில் இந்த நிறுவனத்தில் ஆட்சேர்ப்புத் திட்டம் திருத்தம் செய்வதற்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காத வகையில் பதில் கடமையாற்றும் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர் ஆகியோருக்கு சம்பளம் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு செலுத்தல்

இந்த நிறுவனத்தில் முன்னாள் பதில் கடமையாற்றிய பணிப்பாளர் ஒருவரான கணக்காளர் சேவையின் அலுவலரான எஸ்.ஏ.என். ஆர்.திரு.சுபசிங்க அவர்களால் சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு முரணாக 2015-2016 ஆண்டுகளில் பெறப்பட்டுள்ள சம்பளம் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்குதல்.

**(03) 2020 ஆம் ஆண்டின் ஆண்டு அறிக்கை**

2020 ஆம் ஆண்டில் ஆண்டு அறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிப்பதற்கு தேவையான வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.

**(04) பிரமானங்கள், நிபந்தனைகள், சட்டதிட்டங்கள் மற்றும் சுற்றுநிருபங்களுடன் இணங்குதல்**

இணைந்த திட்டங்களை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கியதுடன், 2021 ஆம் ஆண்டில் நிதிசார் அதிகாரங்கள் நி.ஒ.விதி 135 இன்கீழ் கையளிப்புகள் தொடர்பாக ஆணையாளர் சபை அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டது.

**(05) முறைமைகள் மற்றும் நிருவாக முறைகளின் விளைவுத்திறன்**

வரவு செலவு அட்டவணை, நிருவாக முறைமையாக செயற்படுத்துவதற்கு நிருவாக அதிகாரத்திடம் ஆலோசனை வழங்கப்பட்டது. அதேபோன்று கடன் அறவிடும் செயற்பாட்டினை அவதானித்து ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதான நிறைவேற்று அலுவலரிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

**06. ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் பதவி உயர்வு திட்டங்களை திருத்தம் செய்தல்**

இந்த நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டங்களை திருத்தம் செய்து உரிய அனுமதிகளை துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல்

**07. நிலுவைக் கடனை அறவிடுதல்**

செயலற்ற நிலையில் உள்ள கடன் தொகை அறவிடுவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டு, அந்த நிறுவனங்களுக்கு செலுத்த முடியுமான தவணை தொகைக்கு கடன் தொகையை மீளமைக்கப்பட்டு அறவிடுவதற்கும், மாகாண மட்டத்தில் சமர்ப்பித்து அதற்கு முன்னிலை வழங்கப்பட்டு கலந்துரையாடுவதற்கும் இல்லாவிட்டால் சட்டத்துடனான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆணையாளர் சபையிடம் சமர்ப்பிப்பதற்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

**(08) கணினி மென்பொருள் முறைமை**

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றிக்கொள்ளும்போது உயர் முகாமைத்துவத்திற்கு மிகவும் சரியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உண்மையானதும் சரியானதும் தகவல் முறைமையினை பேணிச் செல்லும் தேவையினை குழுவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி தற்போதுள்ள கணினி கடன் தகவல் முகாமைத்துவ முறைமையின் குறைப்பாடுகளை துரிதமாக தயாரித்து, கணினி முறைமை ஊடாக செவ்வையான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில், உரிய செவ்வைப்படுத்தல்களைத் துரிதமாக முன்னெடுப்பதற்கான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

**(09). கணக்காய்வாளர் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு உசாவுதல்கள் 2020**

கணக்காய்வு உசாவுதலில் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு செவ்வையாக்குவதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

**(10) நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள்**

நிலைபேண்தகு அபிவிருத்தி சட்டம்மூலம் 17 பிரதான நோக்கங்களை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றில் நிறுவனத்திற்கு மிக பயனுள்ள நோக்கங்களை அடையாளம் காணப்பட்டு, அந்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக நிறுவனத்தின் மொத்த பதவியணிக்கும் KPI தயாரித்து, உரிய மதிப்பீட்டு முறை தயாரித்தல் வேண்டுமென சுட்டிக் காட்டப்படுதல்.

2021 ஆம் **ஆண்டின் குழுவின் உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| திருமதி.ஏ.ஏ.அய்.பீ.அதிகாரி | திறைசேரி பிரதிநிதித்துவம் | தலைவர் |
| திருமதி.ஜே.எம்.சீ.ஜயந்தி விஜேதுங்க | பிரதான செயலாளர், மேல் மாகாணம் | உறுப்பினர் |
| திரு. ஏ.டி.கே.குருகே | கௌரவ அமைச்சரால் நியமனம் செய்யப்பட்ட ஆணையாளர் சபையின் உறுப்பினர் | உறுப்பினர் |
| திரு.ஏ.தனபால | கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் | அவதானிப்பாளர் |
| திரு. பி.அபேரத்ன | பிரதான உள்ளக கணக்காய்வாளர் (நிதி அமைச்சு | அழைப்பாளர் |

# நிதிக் கூற்றுகள் மற்றும் தகவல்கள்

தலைவர்
உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

**உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதியத்தின் நிதிக்கூற்றுகளில் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிதி நிலைமைக் கூற்றில் கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய பெறுமதியினுள் உள்ளடக்கப்பட வேண்டிய கடன் மீதிகளுக்கு ஏற்புடையதாக பேரேடு கணக்குகளிலும் உபவ அட்டவணைகளிலும் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகளுக்கிடையில் வேறுபாடு ரூபா. 1,111,512 ஆகும்.

(ஆ) ஆண்டின் இழப்பீட்டு செலவினம் ரூபா.7,597,467 குறைவாக காண்பிக்கப்படுதல் காரணமாக இலாபம் அந்த அளவில் அதிகரித்திருந்ததுடன், கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய பெறுமதியும் ரூபா.7,597,467 ஆல் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஏனைய சொத்துக்களின் பெறுமதியில் ரூபா.20,572,935 ஆன கிடைக்கப்பெற வேண்டிய வருமான வரியின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருப்பினும், கணக்காய்வின்போது குறித்த பெறுமதியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை அடையாளம் காண்பதற்காக இலாபம் சிராக்குகையில், ஆண்டில் கணக்கு வைக்கப்பட்ட ரூபா.9,956,340 ஆன இழப்பீட்டு செலவினம் ரூபா.34,694,072 ஆன பெறுமதியைக் கொண்டிருந்ததுடன், ஆண்டின் வருமான வரி விகிதாசாரம் 28% ஆயினும், பிற்போடப்பட்ட வரி சீராக்குவதற்காக 10% ஆன வரி விகிதாசாரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த விடயங்கள் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ரூபா.5,223,916 ஆல் குறைவாகவும், பிற்போடப்பட்ட வரி வருமானத்திற்குப் பதிலாக ரூபா.3,400,207 ஆன செலவினமும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) LLDF-PS கடன் வட்டி வருமானக் கணக்கில் ஒற்றை நாட்குறிப்பேடுகள் மூலம் ரூபா.632,710 ஐ பற்று வைக்கப்பட்டதன் காரணமாக அந்த அளவில் ஆண்டின் இலாபம் குறைந்திருந்தது.

(ஊ) LLDF-PS கடன் வட்டி வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா. 3,801,359 ஆன கிடைக்கப்பெற வேண்டிய வட்டிக்குப் பதிலாக ரூபா.4,484,631 ஐ வரவு வைத்ததன் காரணமாக ஆண்டின் இலாபம் ரூபா.683,272 ஆல் அதிகரித்திருந்தது.

(எ) LLDF-PS கடன் வட்டி வருமானக் கணக்கில் ஒற்றை நாட்குறிப்பேடுகள் மூலம் ரூபா. 1,734,668 ஐ பற்று வைக்கப்பட்டதன் காரணமாக அந்த அளவில் ஆண்டின் இலாபம் குறைந்திருந்தது.

(ஏ) LLDF-PS கடன் வட்டி வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா. 7,444,668 ஆன கிடைக்கப்பெற வேண்டிய வட்டிக்குப் பதிலாக ரூபா. 9,420,913 ஐ வரவு வைத்ததன் காரணமாக ஆண்டின் இலாபம் ரூபா. 1,976,246 ஆல் அதிகரித்திருந்தது.

(ஐ) LLDF-PS தொங்கல் வட்டி கணக்கில் ஒற்றை நாட்குறிப்பேடுகள் மூலம் ரூபா. 241,578 ஐ பற்று வைக்கப்பட்டதன் காரணமாக அந்த அளவில் குறித்த கணக்கில் மிகையாக காணப்பட்டது.

(ஒ) UDLIHP கடன் வட்டி வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா. 7,439,034 ஆன கிடைக்கப்பெற வேண்டிய வட்டிக்குப் பதிலாக ரூபா. 7,714,845 ஐ வரவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் இலாபம் ரூபா. 275,811 ஆல் அதிகரித்திருந்தது.

(ஓ) பணிக்கொடை செலவினத்தின் பெறுமதி கணக்கிடுகையில் ஆயுட்கால பெறுமதி அறிக்கையில் சலுகை காரணியாக 11% ஐ அடிப்படையாக கொள்ளப்படுகிறது என்று குறிப்பிடப்படினும், சலுகை காரணியாக 7.6 ஐ அடிப்படையாகக்கொண்டு வட்டி செலவினம் கணக்கிடப்படுதல் காரணமாக ரூபா.176, 986 ஆல் பணிக்கொடை செலவினம் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஏனைய விரிவான வருமானத்திற்குள் ஆயுட்கால நட்டமும் அந்த அளவில் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2020 ஆம் ஆண்டில் வருடாந்த அறிக்கை அச்சிடுவதற்காக 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா.436,800 ஆன தொகை 2021 ஆம் ஆண்டில் செலவினமாக அடையாளம் காணப்பட்டு அட்டுறு செலவினமாக கணக்கு வைக்கப்படவில்லை. அதன் காரணமாக ஆண்டின் செலவினம் மற்றும் ஏனைய பொறுப்புகளின் பெறுமதி ரூபா.436,800 ஆல் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஔ) தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற தேறிய காசுப் பாய்ச்சலை கணக்கிடும்போது மேற்கொண்ட சீராக்கல்களில் LGIIP அளிப்பு கடன்தீர்ப்பு (Grant amortization) ரூபா.4,197,514 ஆன பெறுமதியை இரண்டு முறை சீராக்கப்பட்டிருந்தது. (குறைக்கப்படுதல்)

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதியத்தின் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

--------------------------------------------------------------------------------------------

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் என்னிடம் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றவை உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.
நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக போருண்மையாக பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

நிதியத்தின் 2021 வருடாந்த அறிக்கை வாசிக்கின்றவிடத்து, அதனை பொருண்மயாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதாக நான் தீர்மானித்தால், செவ்வைப்படுத்துவதற்காக ஆளும் தரப்பினரிடம் குறித்த விடயங்களை அறிவிக்கப்படுதல் வேண்டும். மேலும் செவ்வைப்படுத்தாத தவறுகளை காண்பிக்கப்பட்டிருப்பின், அவற்றை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை பிரகாரம் என்னால் கால கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன் வைக்கின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

| வட்டியுடன் கூடிய கடன் கொள்வனவு திறைசேரியிடம் செலுத்தப்பட பொறுப்புகள் வேண்டிய பொறுப்புகள் | 4,846,265,690 | 4,967,044,408 | - | - | 227,424,200 | 4,739,620,208 |
| ஏனைய பொறுப்புகள் | 61,164,460 | 61,164,460 | - | 420,827 | 229,123 | 60,514,510 |
| | **4,907,430,150** | **5,028,208,868** | - | **420,827** | **227,653,323** | **4,800,134,718** |

## 27. இடர் முகாமைத்துவம் (மீதி……)

### 27.4 சந்தைக்கான இடர்

சந்தைக்கான இடர் என்பது நிதிசார் நிறுவனமொன்றில் எதிர்கால நிதி ஓட்டங்களில் நியாயமான பெறுமதி, சந்தை விலை கணக்குகளின்மீது ஏற்றத்தாழ்வடைதல் இடராகும். நிதியத்தில் குறித்த சந்தை தொடர்பான இடர் பிரதானமாக , வட்டி விகிதாசாரத்தின் இடர் மற்றும் நிதி இடர் என்பவற்றைக் கொண்டமைந்திருக்கும்.
சந்தை தொடர்பான இடரை முகாமைத்துவம் செய்வதன் பிரதான நோக்கம் யாதெனில், இலாபத்தை சிறப்பான முறையில் பேணிச் சென்று ஏற்றுக்கொள்ள முடியுமான பரிமாணங்களுக்குள் இடர்கள் எதிரநோக்குவதை முகாமைத்தவம் செய்தல் மற்றும் கட்டுப்படுத்தலாகும்.

**27.4.1** பின்வரும் அட்டவணைமூலம் சந்தையல்லாத நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள்மீது நிதியத்தின் வட்டி விகிதாசாரங்கள் இடரை எதிர்நோக்குதல் தொடர்பான பகுப்பாய்வு காட்டப்பட்டுள்ளது.
பொறுப்புகள் முன்கொண்டு வரப்பட்ட பெறுமதியில் உள்ளடக்கப்படுவதுடன், உடன்படிக்கை மேற்கொண்ட மீள் விலையிடல் மற்றும் முதிர்வடையும் திகதிமூலம் வகையீடு செய்யப்படுகின்றது.

| a) 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் | On demand | Less than 3 Months | 4 to 12 Months | 1 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டு வரை | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம; |
|---|---|---|---|---|---|
| **வட்டிமூலம் உழைக்கும் சொத்துக்கள்** | | | | | |
| பணமும் பணத்திற்கு சமமானவைகளும் | 86,751,731 | - | - | - | 86,751,731 |
| வங்கி மீதி | - | 848,000,000 | 100,000,000 | - | 948,000,000 |
| கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள | - | 103,637,095 | 310,911,286 | 3,040,021,460 | 3,454,569,841 |
| ஏனைய சொத்துக்கள் | - | - | 68,543,206 | 41,258,082 | 109,801,288 |
| **மொத்த வட்டி உழைப்பு சொத்துக்கள்** | 86,751,731 | **951,637,095** | **479,454,492** | **3,081,279,542** | **4,599,122,860** |
| **வட்டியுடன்கூடிய பொறுப்புகள்** | | | | | |
| வட்டியுடன்கூடிய கடன் மற்றும் கொள்வனவு, திறைசேரியிடம் செலுத்த வேண்டியவைகள் | - | - | 241,981,083 | 4,348,459,236 | 4,590,440,319 |
| ஏனைய பொறுப்புகள் | - | 348,356 | 318,000 | 32,234,136 | 32,900,492 |
| **மொத்த வட்டிகளுடன் கூடிய பொறுப்புகள்** | **-** | **348,356** | **242,299,083** | **4,380,693,373** | **4,623,340,801** |
| வட்டி உழைப்பு சொத்துக்கள் | | | | | |
| வட்டியுடன்கூடிய பொறுப்புகள் தேறிய சொத்துக்கள்/பொறுப்புகளுக்கிடையிலான வேறுபாடு | 86,751,731 | **951,288,739** | **237,155,409** | **(1,299,413,830)** | **(24,217,951)** |

**27. இடர் முகாமைத்துவம் (மீதி)**

**b) 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில்**

| | கோரிக்கை மீத | 03 மாதங்களுக்கு குறைந்த | 4 மாதங்கள் தொடக்கம் 12 மாதங்கள் வரை | ஓராண்டுக்கு அதிகமான | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் திசெம்பர் 31 ஆந் திகதி வரை மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **வட்டி உழைப்பு சொத்துக்கள்** | | | | | |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் | 172,730,801 | - | - | - | 172,730,801 |
| வங்கி மீதி | - | 998,000,000 | - | - | 998,000,000 |
| கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள் | | 102,605,387 | 307,816,162 | 3,007,809,411 | 3,418,230,960 |
| ஏனைய சொத்துக்கள் | | - | 61,850,346 | 144,289,463 | 206,139,809 |
| **மொத்த வட்டி உழைப்பு சொத்துக்கள்** | 172,730,801 | **1,100,605,387** | **369,666,508** | **3,152,098,874** | **4,795,101,570** |
| **வட்டி உழைப்பு பொறுப்புகள்** | | | | | |
| வட்டியுடன்கூடிய கடன் கொள்வனவுகள் மற்றும் திறைசேரியிடம் செலத்தப்பட வேண்டியவை | - | - | 252,858,307 | 4,593,407,383 | 4,846,265,690 |
| ஏனைய பொறுப்புகள் | - | 420,827 | 229,123 | 60,514,510 | 61,164,460 |
| **முழு வட்டியுடன் கூடிய பொறுப்புகள்** | - | **420,827** | **253,087,430** | **4,653,921,893** | **4,907,430,150** |
| வட்டியுடன் கூடிய சொத்துக்கள் மற்றும் வட்டியற்ற பொறுப்புகளுடன் கூடிய வேறுபாடு | 172,730,801 | **1,100,184,560** | **116,579,078** | **(1,501,823,019)** | **(112,328,580)** |

## 27.4.2 வட்டி விகிதாசாரத்தின் நெகிழ்வுத் தன்மை

விரிவான வருமானக் கூற்றில் பேணிச் செல்கின்ற ஏனைய எல்லா ஏற்றத் தாழ்வுகளுடன் வட்டி விகிதாசாரங்களின் வேறுபாடுகள் தொடர்பான நெகிழ்வுத்தன்மை பின்வரும் அட்டவணையில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

| | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | வட்டி விகிதாசாரத்தில் அதிகரித்தல்/ குறைதல் | வரிக்கு முன்னராக இலாபத்திற்கான தாக்கங்கள் | வட்டி விகிதாசாரத்தில் அதிகரித்தல்/ குறைதல | வரிக்கு முன்னராக இலாபத்திற்கான தாக்கங்கள் |
| | | ரூபா | | ரூபா |
| வட்டி விகிதாசாரம் | + 1% | 8,730,311 | + 1% | 6,746,018 |
| வட்டி விகிதாசாரம் | - 1% | (8,730,311) | - 1% | (6,746,018) |

# கணக்கீட்டு கொள்கைகள்

**உளளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்**

---

**2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக கணக்கீட்டு கொள்கைகள்**

**பதிவு செய்கின்ற நிறுவனம்**

**1.1 பொதுவான தகவல்கள்**

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதயம் என்பது (உ.க. மற்றும் அபி.நிதி) 1916 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கட்டளைச் சட்டம்மூலம் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும். அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலங்கையில் இலக்கம் 24, வோட் ப்ளேஸ், கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

**1.2 பிரதான பணிகள் மற்றும் தொழிற்பாடுகளின் இயல்பு**

குறித்த நிதியத்தின் பிரதான பணி யாதெனில், பொது வசதிகளின் பொருட்டு உள்ளூர் அதிகார சபைகளுக்கு கடன் வசதிகளை ஏற்பாடு செய்தலாகும். உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்தின் குறிக்கோள் யாதெனில், உள்ளூர் மட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளின் பொருட்டு நிதியிடல் மேற்கொள்கின்ற முன்னோடி நிறுவனமாகுதலாகும்.

**2. தயாரிக்கும் அடிப்படை**

**2.1 இணைப்பதற்கான அடிப்படை**

உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம், நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்பு கருத்திட்டம், பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டம் என்பவற்றின் உப பணிகளாக நேரடி வருமானம் மற்றும் செலவினம் வெவ்வேறாக செயற்படுத்தி, ஆண்டு இறுதியில் இணைக்கும் பகுதிகளை அடையாளம் காணப்படும். சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பனவும் ஐந்தொகையில் சேர்க்கப்படும்

**2.2 செயலூக்கமிக்க மற்றும் சமர்ப்பித்தல் பணம்**

திரட்டிய இலங்கை ரூபா மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், எல்லா பெறுமதிகளையும் ஏனைய வகையில் காட்டப்படாத சந்தர்ப்பங்களில் அண்மித்த ரூபாவிற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

**2.3 உடன்பாடு தொடர்பான கூற்று**

நிதி நிலைமை கூற்று, விரிவான வருமான கூற்று, பங்குச் சந்தையின் மாற்றங்கள் தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள் ஆகிய ஆவணங்களில், நிதியத்தின் நிதி கூற்று கொண்டமைந்துள்ளதுடன், அவை இலங்கை பட்டயம் பெற்ற

கணக்காய்வு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. (SLFRSs and LKASs)

## 2.4 நிதி கூற்றுகள் தொடர்பான பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுகளை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் முன்னிலைப்படுத்தல் தொடர்பில் ஆணையாளர் சபை பொறுப்பு கூறுதல் வேண்டும். இப் பொறுப்பில் பின்வருவன உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகளின் காணரமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுப்பட்ட கூற்றுகளை தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணுதல்.

## 2.5 ஆணையாளர் சபையால் நிதி கூற்றுகளை அங்கீகரித்தல்

2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதியத்தின் நிதி கூற்றுகள் 2021 ஆம் ஆண்டு பெப்ருவரி 25 ஆந் திகதி ஆணையாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 2.6 அளவீடுதலுக்கான அடிப்படை

நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்படும் பின்வரும் பொருட்களுக்கான உருப்படிகளை தவிர்ந்த நிதியத்தின் நிதி கூற்றுகள் வரலாற்று செலவுகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

| உருப்படிகள் | அளவவிடுதலுக்கான அடிப்படை |
|---|---|
| வரைவிலக்கணம் மேற்கொண்ட நலன்களின் கடப்பாடுகள் | திட்டமிடப்பட்ட சொத்துக்களில் நியாயமான பெறுமதியைக் கழிக்கப்பட்ட பின்னர், வரைவிலக்கணம் செய்யப்பட்ட நலன்களின் கடப்பாடுகளில் தற்கால பெறுமதியை அடையாளம் காணுதல் |

## 2.7. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானிப்புகள்

கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்தல் மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள் வருமானம், செலவுகளில் அறிக்கையிடப்பட்ட அளவுகளுக்கு ஏதுவாக அமையும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானிப்புகள் என்பவற்றை தயாரிப்பதற்கு முகாமைத்துவத்திற்கு தேவைப்படுகின்ற, இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமையும் வகையில் நிதியத்தின் நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த மதிப்பீடுகளுக்கும் பார்க்க உண்யைமான பெறுபேறுகள் வேறுபடலாம். முன்னரான காலவெல்லைக்கு ஏற்புடையதாக அறிக்கையிடப்பட்ட சில எண்களை செவ்வையாக்கும் நோக்கில் மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான அனுமானிப்புகள் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றது. மதிப்பீடுகள் திருத்தம் செய்யப்படுகின்ற மற்றும் எதிர்கால காலவெல்லைக்குள் கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பான திருத்தங்கள் அடையாளம் காணப்படுகின்றது. மதிப்பீடுகள் மேற்கொள்கின்ற முக்கியமான பகுதிகள், நிதியத்தில் நிதி

கூற்றுகளில் அடையாளம் காணப்படும் அளவுகளுக்கு அதிகூடிய தாக்கங்களை ஏற்படுத்தும் கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்தும்போது நிகழத்தக்க நிலைமைகள் மற்றும் தீர்வுகள் பின்வருமாறாகும்.

### 2.7.1. தொடர்ச்சியான நிலைப்பாடு மற்றும் கணக்கீட்டு அடிப்படை

தொடர்ச்சியான அடிப்படையில் நடைமுறைப்படுவதற்காக நிதியத்திற்குள்ள ஆற்றல் தொடர்பாக ஆணையாளர் சபையால் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எதிர்வுகூறப்பட்டுள்ள இனிவரும் காலப் பகுதியில் அதற்கு தொடர்ச்சியான வியாபார நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்கு போதியளவிலான வளங்கள் உள்ளதாக சபை திருப்தியடைந்துள்ளது. மேலும் தொடர்ச்சியான அடிப்படையில் நிதியம் நடைமுறைப்படுவதற்கு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்த முடியுமான எதுவித பொருட்களுடனான நிகழத்தக்க நிலைமை பற்றி சபை அறியப்பட மாட்டாதென்பதுடன். நிதியத்தின் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு அல்லது மூடுவதற்கு அவர்கள் எதிர் பார்க்கவில்லை. ஆகையால் நிதியத்தின் நிதி கூற்றுகளின் தொடர்ச்சியான நிலைமை தொடர்பான அடிப்படையில் தொடர்ச்சியாக தயாரிக்கப்படும்.

### 2.7.2. கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகளின் வலுக்குறை இழப்பீடுகள்

விரிவான வருமான கூற்றில் வலுக்குறை இழப்பீடுகளை பதிவு செய்தல் வேண்டுமா என்பதை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு பதிவுத் திகதியிலும், நிதியம் வெவ்வேறாக முக்கியமாகும் ஒவ்வொரு கடன் மற்றும் முற்பணங்களையும் மீளாய்விற்கு உட்படுத்துகின்றது. விசேடமாக வலுக்குறை இழப்பீடுகளை நிருணயிக்கும் போது எதிர்கால காசுப் பாய்ச்சலின் தொகை மற்றும் காலம் என்பவற்றை மதிப்பீடு செய்வதற்கு முகாமைத்துவத்தின் தீர்ப்புகள் அவசியமாகின்றது. குறித்த பல மதிப்பீட்டு காரணிகள், அனுமானிப்புகளை அடிப்படையாகக்கொள்வதுடன், வலுக்குறை இழப்பீடுகளுக்கான கொடுப்பனவுக்கு மேற்கொள்கின்ற எதிர்கால மாற்றங்களின் பயனாக உண்மையான பெறுபேறுகளில் மாற்றங்கள் ஏற்படலாம். வலிமையான சாட்சிகள் இருப்பினும், அதன் தாக்கம் இதுவரை தெளிவாக இல்லாத, ஏற்பட்டுள்ள இழப்புகள் காரணமாக ஒதுக்கீடுகள் அளிக்கப்பட வேண்டுமா என்பதை தீர்மானிப்பதற்கு வெவ்வேறாக மதிப்பிடப்பட்ட மற்றும் வலுக்குறை இழப்பீடுகள் என்று மேற்கொள்ளாத கடன், முற்பணம் மற்றும் அனைத்தும் வெவ்வேறாக எடுத்துக்கொண்டால் முக்கியமல்லாத கடன் மற்றும் முற்பணங்கள் பின்னராக மதிப்பிடப்படும்.

### 2.7.3. வரியிடல்

நிதியம் வருமான வரிக்கு உட்படுவதுடன், குறித்த நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் சந்தர்ப்பமாகும்போது ஏற்புடையதாகும் வரி சட்டங்கள் தொடர்பான வரைவிலக்கணத்திற்கு அமைவாக நிலவும் நிகழத்தக்க நிலைமை காரணமாக தற்கால, பிற்போடுதல் மற்றும் ஏனைய வரி நிருணயித்தலுக்கு தீர்வு தேவைப்படுகின்றது.

### 2.7.4. வேலைவாய்ப்புக்குப் பின் நலன்களின் பொறுப்பு

எதிர்வுகூறப்பட்ட அலகு கடன் முறையை பயன்படுத்தி ஆண்டின் வேலை வாய்ப்புகளுக்குப் பின் நலன்களின் பொறுப்பு மற்றும் ஏற்புடைய கட்டணங்கள் தீர்மானிக்கப்படும். மதிப்பீட்டு முறை,

சலுகை விகிதாசாரம், எதிர்கால சம்பள அதிகரிப்பு, இறப்பு விகிதாசாரம் என்பன தொடர்பாக அனுமானிப்புகளுடன் தொடர்புபடும். குறித்த பொறுப்புகளில் நீண்டகால தன்மை மீது இந்த மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிகழத்தக்க நிலைமைகளுக்கு உட்படும். ஒவ்வொரு பதிவுகளின் காலவெல்லைக்கும் எல்லா அனுமானிப்புகளையும் மீளாய்வு செய்யப்படும்.

**2.7.5. சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பயன்பாட்டு ஆயுட் காலம்**

ஒவ்வொரு பதிவுத் திகதியிலும் நிதியம், சொத்துக்களின் மீதி பெறுமதிகள், பயன்பாட்டு ஆயுட் காலம், தேய்மான முறை தொடர்பாக ஆய்வு செய்கின்றது. குறித்த பெறுமதிகள், விகிதாசாரங்கள், முறைகள் என்பவற்றை மதிப்பிடுகையில் முகாமைத்துவத்தின் தீர்ப்புகளை பயன்படுத்துவதுடன், ஆகையால் அவை நிகழத்தக்க நிலைமைக்கு உட்படுகின்றது.

## 2.8. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் அடையாளம் காணப்படும்.

### 2.8.1. வரியிடல்

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் - LKAS 12 (வருமான வரி) படி, தற்கால மற்றும் பிற்போடப்பட்ட வரியிடல் தொடர்பிலான காலப் பகுதிக்கு இலாபங்கள் அல்லது நட்டங்கள் தீர்மானிக்கும்போது உள்ளடக்கும் தொகையின் மொத்தமானது,வரி செலவாகும். உரித்துகளில் நேரடியாக அடையாளம் காணப்படும் உருப்படிகள் அல்லது உரித்துகள் அல்லது ஏனைய விரிவான வருமானங்களுள் அடையாளம் காணப்படும் சந்தர்ப்பங்களில் ஏனைய விரிவான வருமானம் வரை ஏற்புடையதாகும் அளவு தவிர்ந்த வரி செலவு விரிவான வருமானக் கூற்றில் வருமான வரி செலவாக அடையாளம் காணப்படும்.

.

**அ) தற்கால வரி**

விதிக்கப்பட்ட வரி விகிதாசாரம் அல்லது வரிச் சட்டம் அல்லது பதிவு செய்தல் திகதியில் கவனிக்கத்தக்கதாக விதிக்கப்படும் மற்றும் முன்னரான ஆண்டுக்கு ஏற்புடையதாக செலுத்தப்பட வேண்டிய வரிகளுக்கு மேற்கொள்கின்ற ஏதேனும் சீராக்கல்களை மேற்கொண்டு, நிலவுகின்ற ஆண்டுக்கு ஏற்புடையதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவருக்கு செலுத்துவதற்கு எதிர் பார்க்கப்படும் தொகை, தற்கால வரி சொத்துக்களையும் பொறுப்புகளையும் கொண்டமைந்துள்ளது.

அதனடிப்படையில் 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் நிதி கூற்றுகளில் 10.2 குறிப்பில் விசேடமாக காட்டப்பட்டுள்ள விகிதாசாரங்கள் தொடர்பான திருத்தங்களின்படி வரி அலுவலின் பொருட்டு சீராக்கப்பட்ட இலாபத்தின்மீதான வரிக்கு ஏற்பாடுகள் அளிக்கப்படுகின்றது.

**ஆ) பிற்போடப்பட்ட வரி**

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளில் வரி அடிப்படை மற்றும் நிதி அறிக்கையிடல் பணியின் பொருட்டு அவற்றில் முன்கொண்டு வந்த பெறுமதிக்கிடையில், அறிக்கையிடும் திகதியில் நிலவும் தற்காலிக வேறுபாடுகள்மீது பிற்போடப்பட்ட வரி தயாரிக்கப்படும்.

விதிக்கப்பட்டுள்ள அல்லது பதிவு செய்யப்படும் திகதியில் கவனிக்கத்தக்க அளவில் விதிக்கப்படும் சட்டங்களை அடிப்படையாகக்கொண்டு, தற்காலிக மாற்றங்களை மீண்டும் பற்று வைக்கும் சந்தர்ப்பத்தில், தற்காலிக வேறுபாடுகளுக்கமைவாக எதிர் பார்க்கப்படும் வரி விகிதாசாரம்படி பிற்போடப்பட்ட வரி அளவிடப்படும்.

தற்கால வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை பதிலீடு செய்யும் பொருட்டு சட்டரீதியாக வலுப்படுத்தல் உரித்து இருப்பின், பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை பதிலீடு செய்வதுடன், அவை ஒரே வரி அறவிடப்பட முடியுமான வியாபாரத்தில் ஒரே வரி அதிகார சபை அல்லது வேறு வரி அதிகார சபைகளால் அறிவிடப்படும் வரிகளுக்கு ஏற்புடையதாகும். ஆயினும் தேறிய அடிப்படையின்மீது தற்கால வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை சீராக்குவதற்கு கருதப்படுவதுடன், இல்லாவிட்டால் வரி சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் ஒரே முறையில் பணமாக்கப்படும்.

பயன்படுத்தியவற்றுக்கு முரணாக இருக்க முடியுமான, எதிர் காலத்தில் வரி அறவிட முடியுமான இலாபமொன்றில் இருக்க வேண்டிய வரை பயன்படுத்தாத வரி இழப்புகள், வரிக் கடன் மற்றும் குறைக்க முடியுமான தற்காலிக மாற்றங்களுக்காக பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் அடையாளம் காணப்படுகிறது. ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் பிற்போடப்பட்ட வரி மீளாய்வுக்குட்படுத்துவதுடன், மேலும் உரிய வரி நலன்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாத வரை குறைக்கப்படும்.

விரிவான வருமானக் கூற்றில் பிற்போடப்பட்ட வரி பொறுப்புகளில் முன்கொண்டு வரப்பட்ட பெறுமதிகளில் தேறிய அதிகரிப்பு பிற்போடப்பட்ட வரி செலவாக அடையாளம் காணப்படுவதுடன், அதற்கு எதிராக தேறிய குறைவடைதல், பிற்போடப்பட்ட வரி செலவு மீண்டும் மாற்றுதலாக அடையாளம் காணப்படும்.

## 2.8.2. காசும் காசுக்கு சமமானவைகளும்

காசும் காசுக்கு சமமானவைகள் என்பது கையிருப்பு பணம், வைப்புகள் மற்றும் பணமாக்க முடியுமான குறுகியகால முதலீடுகள் மற்றும் பெறுமதிகள் மாறும்போது சிறிய அளவில் இடர் நிலைக்கு உட்படுபவைகளாகும்.

காசுப் பாய்ச்சல் தொடர்பில் மேற்கொள்கையில் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் கையிருப்புகள், வங்கிகளில் உள்ள வைப்புகள், செலுத்தப்பட வேண்டிய வங்கி மேலதிக பற்றுகள், என்பனவற்றை கொண்டமைந்திருக்கும். அதே போன்று கையேற்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதி அல்லது அதற்கு குறைந்த காலப்பகுதிக்குள் முதிர்வடைகின்ற நிதிசார் உபகரணங்களும் பணத்திற்கு சமமானவைகளாக கருதப்படும்

## 2.8.3. சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் செலவு

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் பின்னராக வரும் ஏதேனுமொரு திரண்ட தேய்மானம் மற்றும் ஏதேனுமொரு பின்னரான திரண்ட வலுகுறை இழப்பீடுகளாக கழிக்கப்பட்டதன் பின்னரான செலவாகும். எல்லா வகையிலுமான சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் முதலாவதாக செலவில் பதிவு செய்யப்படுகிறது.
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பது அந்த சொத்துக்கள் எதிர் பார்க்கப்பட்ட பயன்படுத்த முடியுமான மட்டத்திற்கு கொண்டு வரும்போது மேற்கொள்கின்ற

செலவுகளும் அடங்கலாக, குறித்த சொத்துக்களை கைப்பற்றுதல்கள் அல்லது நிருமாணிப்பு செலவாகும். ஏனைய எல்லா பழுதுபார்த்தல்களும் பேணுதல் செலவுகளும் ஏற்படும் சந்தர்ப்பத்தில் இலாபம் அல்லது நட்டமாக அடையாளம் காணப்படும்.

**தேய்மானம்**

குறைவடைந்து செல்லும் தேய்மான முறையினை பயன்படுத்தி உபயோகிக்க முடியுமான ஆயுட் காலம்மீது சொத்துக்களின் மிகுதி பெறுமதி குறைக்கப்பட்டு, செலவினை பதிவழிக்க இயன்றவாறு தேய்மானம் விரிவான வருமான கூற்றில் உள்ளடக்கப்படுவதுடன், கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் தேய்மான ஒதுக்கீடு மேற்கொள்ளப்படமாட்டாது. மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு காலம், மீதி பெறுமதி மற்றும் தேய்மான முறை ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் நிகழத்தக்க நிலை அடிப்படையில் மதிப்பீட்டில் எந்தவொரு மாற்றத்தின் தாக்கத்தை கவனத்தில் கொண்டு மீளாய்வு செய்யப்படும். சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட் காலம் பின்வருமாறாகும்.

| புலன்சார் சொத்துக்களின் வகுப்பு | பயன்படுத்த முடியுமான ஆயுட் காலம் |
|---|---|
| தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 10 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| கணினி மற்றும் மென்பொருட்கள் | 4 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுக்ள |

**மீண்டும் அடையாளம் காணுதல்**

அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது சொத்துக்களை பயன்படுத்துவதன் ஊடாக எதிர்கால பொருளாதார நலன்களை எதிர் பார்க்கப்படாத சந்தர்ப்பங்களில் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை மீண்டும் அடையாளம் காணப்படும். ஏதேனும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை மீண்டும் அடையாளம் காணக்கூடியவாறு இலாபங்கள் அல்லது நட்டங்கள் சொத்துக்களின் விற்பனை தொகை மற்றும் முன்கொண்டு வரப்பட்ட பெறுமதி என்பவற்றுக்கிடையில் உள்ள வேறுபாடை கொண்டு தீர்மானிக்கப்படும். அதனை விரிவான வருமான கூற்றுக்கு எடுக்கப்படும்.

### 2.8.4. செலுத்தப்பட வேண்டிய மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய கடன் அளிப்புகளை கடன்தீர்ப்பு செய்தல்

செலுத்தப்பட வேண்டிய கடன்மூலம் வெளிப்படுத்தப்படுவது யாதெனில், உள்ளூர் அதிகார சபைகளிடம் வழங்குவதற்கு “ஆ” ஆக்கக்கூறின்கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுடன், LGIIP கருத்திட்டத்தின்கீழ் கிடைக்கப்பெறும் இலங்கை அரசாங்கத்தின் நிதியாகும். கிடைக்கப்பெற வேண்டிய கடன்மூலம் பிரதிநிதித்துவப்படுத்துவது யாதெனில், கடன் ஆக்கக்கூறுடன், உள்ளூர் அதிகார சபைகளிடம் வழங்கப்படும் அளிப்புகளாகும். செலவாக கருதப்படும் கிடைக்கப்பெற வேண்டிய கடன் அளிப்புகள் குறித்த செயற்பாடுகளில் வட்டி கிடைக்கப்பெறும் ஆண்டுகள் முழுவதும் ஒழுங்குமுறையாக வருமானக் கூற்றில் பிற்போடல் மற்றும் கடன்தீர்ப்பு மேற்கொள்ளப்படும். செலுத்தப்பட வேண்டிய கடனும் இந்த முறையின்கீழ் கடன்தீர்ப்பு மேற்கொள்ளப்படும். இதன்போது உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் இணைந்த வரிக்கு முன்னரான இலாபம், வரிக்கு மன்னர் மற்றும் தேறிய கடன் தீர்ப்பு இலாபத்தில் 5% இலும் பார்க்க குறைதலாகாது.

### 2.8.5. பொருட் பதிவேடு

பொருட் பதிவேடுகள்மூலம் ரூபா.5000 இற்கும் குறைந்த பெறுமதிகளைக் கொண்ட வகைகளை பிரதிநிதித்து வப்படுத்துவதுடன். அவை சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்ற வகையில் அடையாளம் காண முடியாது. மேலும் பொருட் பதிவேடு புத்தகத்தில் வகைப்படுத்தும் பொருட்டு சொத்தில் ஆயுட்காலம் கவனத்தில் கொள்ளப்படும். ஏதேனுமொரு சொத்தில் ஆயுட்காலம் கவனத்தில் கொள்ளத்தக்க அளவில் பயணபடுத்தாவிட்டால் அதன் கிரயம் செலவினமாக கருதி விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்படும்.

### 2.8.6. வேலைவாய்ப்புக்குப் பின் நலன்களின் பொறுப்பு

**ஏ) தீர்மானிக்கப்பட்ட நலன்களின் திட்டம் - பணிக்கொடை**

பணிக்கொடை என்பது நிருணயிக்கப்பட்ட நலன்களின் திட்டமாகும். நிதியம் வருடாந்தம் பணிக்கொடையாக உறுதியளித்துள்ள ஓய்வூதிய நலன்களின் தற்கால பெறுமதி கணிப்பீடு செய்கின்றது. அது நிருணயிக்கப்பட்ட நலன் திட்டமாகும். நிருணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின்கீழ் நலன் அளிக்கும் பொருட்டு கிரயம் தீர்மானிக்கப்படுவது, காப்பீட்டு மதிப்பீட்டாளர் ஒருவரின் நிபுணத்துவ அறிவை பயன்படுத்தி கருத்திட்டங்களின் அலகுகளின் கடன் முறை மூலமாகும்.

நிருணயிக்கப்படும் நலன்களின் திட்டத்தில் நிபுணத்தவ காப்பீட்டு நலன்கள் மற்றும் நட்டங்கள் வேறு விரிவான வருமானத்தில் ஏற்படும் காலவெல்லைக்குள் முழுமையாக அடையாளம் காணப்படும்.

குறித்த பணிக்கொடை பொறுப்பிற்கு உள்ளக அல்லது வெளியக நிதியம் வழங்கப்படமாட்டாது.

**இ)** நிருணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் சம்பந்தப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுக்கு உதவு தொகை செலுத்துவதற்கு ஊழியர்கள் உரித்து பெறுகின்றார்கள்.

### 2.8.7. ஒதுக்கீடுகள்

கடந்தகால நிகழ்வின் பலனாக நிதியத்திற்கு தற்கால கடப்பாடாக (சட்டரீதயிான அல்லது சகாயர்) உள்ளவிடத்து மற்றும் குறித்த கடப்பாட்டை தீர்க்கும் பொருட்டு பொருளாதார நலன்களுடன்கூடிய வளங்கள் வெளியில் செல்கின்ற நிலை ஏற்படுமிடத்து, குறித்த கடப்பாட்டின் தொகை தொடர்பில் நம்பிக்கையுடன்கூடிய மதிப்பீடு தயாரிப்பதற்கு முடியுமானவிடத்து அதற்காக ஒதுக்கீடுகள் அடையாளம் காணப்படும்.

### 2.8.8. ஏனைய நிதியல்லாத சொத்துக்கள்

ஏனைய எல்லா நிதியல்லாத சொத்துக்களை அதன் முன்கொண்டு வரப்பட்ட பெறுமதி, மதிப்பிடப்பட்ட பணமாக்க முடியுமான பெறுமதிக்கு கழிப்பதற்கு முடியுமானவாறு தேவையான சந்தரப்பங்களில் விசேட ஒதுக்கீகளின்மீது மதிப்பிடப்படும்.

### 2.8.9. ஏனைய நிதியல்லாத பொறுப்புகள்

ஏனைய நிதியல்லாத பொறுப்புகள் மற்றும் அதன் பொதுவான அளவின்படி அடையாளம் காணப்படும்

### 2.8.10. நிதியல்லாத சொத்துக்களின் வலுக்குறை

ஏதேனுமொரு சொத்தின் பொருட்டு வலுக்குறை தொடர்பான தேவை உள்ளதா என்பது தொடர்பாக அறிவதற்கு நிதியம் ஒவ்வொரு பதிவு செய்யும் திகதியிலும் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது. அவ்வாறு வலுக்குறை தொடர்பாக அறிய வேண்டுமாயின், இல்லாவிட்டால் ஏதேனும் சொத்துக்காக வருடாந்த வலுக்குறை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமாயின் நிதியம் சொத்தில் அறவிட முடியுமான பெறுமதி தொடர்பாக மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. ஏதேனுமொரு சொத்தில் அவ்வாறு அறவிட முடியுமான பெறுமதி குறித்த சொத்தில் பயன்பாட்டு பெறுமதி மற்றும் விற்பனை கிரயம் கழித்த பின்னர் நியாயாமான பெறுமதியிலும் பார்க்க அதிகரித்தல் வேண்டும். ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக்களின் தொகுதியாக அதிகளவில் சுயாதீனமாக பணம் உருவாகாகவிட்டால் தனிதனியாக சொத்துகளாக தீர்மானிக்கப்படும். ஏதேனுமொரு சொத்தில் முன்கொண்டு வந்த பெறுமதி அதன் அறவிட முடியுமான பெறுமதியை விஞ்சும் சந்தர்ப்பத்தில் சொத்துக்களின் மதிப்பிறக்க இழப்பாக கருதப்படுவதுடன், அது அதன் அறிவிட முடியுமான பெறுமதியை கணக்கில் வைக்கப்படும்.

### 2.8.11. நிதிசார் உபகரணங்கள் - அடிப்படை அடையாளம்காணுதல் மற்றும் இசைவான அளவையிடல்கள்

நிதியத்தின் நிதிசார் உபகரணங்களின் கடன், கிடைக்கப்பெற வேண்டியவைகள் மற்றும் ஏனைய நிதிசார் பொறுப்புகளைக் கொண்டமைந்துள்ளதுடன். அதன் இசைவான அளவையிடல் முடங்கும் இழப்புகள் மற்றும் மீண்டும் அடையாளம்காணுதல் தொடர்பான கணக்கீட்டு கொள்கைகள் பின்வருமாறாகும்.

#### i. நிதிசார் சொத்துக்கள்

இலங்கை பொதுக் கணக்கீட்டு தரநியமங்கள் 39 இல், நிதிசார் சொத்துக்களை அடிப்படையில் அடையாளம் காணுகையில் தமது நிதிசார் சொத்துக்களின் வகைப்படுத்தலை பொருத்தமானவாறு தீர்மானிக்கப்படுகின்ற வகையில் இலாபங்கள் அல்லது நட்டங்கள், கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள், முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படும் முதலீடுகள் மற்றும் விற்பனைக்குள்ள நிதிசார் சொத்துக்களின் ஊடாக நியாயமான பெறுமதிமீது நிதிசார் சொத்துக்கள் வகைப்படுத்தலுக்கு உட்படும். எல்லா நிதிசார் சொத்துக்களும் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதி மற்றும் (நியாயமான பெறுமதியின் மீது இல்லாத சொத்துக்கள் தொடர்பில் இலாபங்கள் அல்லது நட்டங்கள்மீது) நேரடியாக உடமையாக்கி கொள்ள முடியுமான கொடுக்கல்வாங்கல் கிரயத்தின் மொத்தம்மீது அடையாளம் காணப்படும்.

**கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள்**

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள் என்பது, செயலூக்கமிக்க சந்தையின் விலை குறிப்பிடப்படாத நிலையான அல்லது நிருணயிக்க முடியுமான கொடுப்பனவுகளுடன்கூடிய

வழிப்பொருட்கள் அல்லாத நிதிசார் சொத்துகளாகும். ஆரம்ப அளவையிடல்களின் பின்னர் வலுக்குறை பெறுமதி குறைக்கப்பட்டு, பயனுள்ள வட்டி விகிதாசார முறை பயன்படுத்தி , அவ்வாறான நிதிசார் சொத்துக்களை பின்பு கடன்தீர்ப்பு கிரயம்மீது பின்னராக மதிப்பீடு செய்யப்படும். குறித்த கடன்தீர்ப்பு கிரயம் கணக்கிப்படுவது எவ்வாறெனில், கையகப்படுத்தல் மீதான சலுகை அல்லது தவணை மற்றும் பயனுள்ள வட்டி விகிதாசாரத்தின் இணைந்த பகுதியான கட்டணங்கள் அல்லது கிரயத்தை அடிப்படையாகக் கொண்டாகும். குறித்த பயனுள்ள வட்டி விகிதாசார முறையின்கீழான கடன்தீரப்பு விரிவான வருமானக் கூற்றின் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மதிப்பிறக்க இழப்புகளால் ஏற்படும் நட்டங்கள் விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகிறது. கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள் நிதிசார் நிலைமை கூற்றில் சமர்ப்பிக்கப்படுகிறன.

**மீண்டும் அடையாளம் காணுதல்**

பின்வரும் சந்தரப்பங்களில் நிதிசார் சொத்துக்களை அடையாளம் காணப்படும். (இல்லையெனில் ஏற்புடையதாகும் வகையில் நிதிசார் சொத்துக்களின் ஒரு பகுதி அல்லது சமமான நிதிசார் சொத்துக்களின் கூட்டுத் தொகுதியின் ஒரு பகுதி)

i. சொத்தில் காசுப் பாய்ச்சல்களை பெற்றுக்கொள்வதற்கான உரிமை காலம் கடந்துள்ளவிடத்து
ii. நிதியம் சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சலை பெறுவதற்கு தமக்குள்ள உரிமையை மாற்றம் செய்துள்ளவிடத்து அல்லது மூன்றாம் தரப்பினறுக்கு ‘pass-through’ நிகழ்ச்சித்திட்டம் ஊடாக பௌதீக ரீதியாக தாமதமின்றி காசுப் பாய்ச்சல் முழுமையான பொறுப்பாக செலுத்துவதற்கு ஏற்றுக்கொண்டுள்ளவிடத்து மற்றும்

அ) நிதியத்தின் சொத்துக்களின் வருமுன் இழப்பு அல்லது நிதிசார் நலன்கள் அனைத்தையும் மாற்றியுள்ளவிடத்து அல்லது

ஆ) நிதியம் சொத்தின் அனைத்தினதும் வருமன் இழப்பு நிலை அல்லது நலன்களை பெரும்பாலும் மாற்றப்பட்டு அல்லது வைத்துக்கொள்ளாதபோதிலும் சொத்தின் நிருவாகம் மாற்றி உள்ளவிடத்து

**நிதிசார் சொத்துக்களின் வலுக்குறை**

கணக்கீட்டு கருமங்களின் பொருட்டு உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம், வலுக்குறை இழப்புகளாக மேற்கொண்ட நிதிசார் சொத்துக்களின்மீதான நட்டங்களை அடையாளம் காணும் வகையில் நட்டங்களின் மாதிரியை (incurred loss model) பயன்படுத்துகின்றது. இதன் பொருள் யாதெனில் நட்டங்களை அடையாளம் காண முடிவது, நட்டங்கள் தொடர்பான வலுவான சாட்சிகள் அவதானிக்கப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும். அவ்வாறான நிகழ்வுகளுக்கு பின்வருவன உதாரணங்களாகும்.

- நுகர்வாளரின் குறிப்பிடத்தக்க நிதிசார் சிரமங்கள் (உள்ளூர் அதிகாரசபை)
- கொடுப்பனவுகளை தவறவிடுதல் போன்ற உடன்படிக்கை மீறுதல்
- உள்ளூர் அதிகார சபை நிதி சிரமங்களை எதிர்நோக்குவதன் காரணமாக உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் உள்ளூர் அதிகார சபைக்கு சலுகை வழங்கும்போது
- உளளூர் அதிகார சபை நிதிசார் சிரமங்களை எதிர் நோக்கும் சந்தர்ப்பங்களில்
- கடன்களிலிருந்து வரும் மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதி பாய்ச்சல்களில் குறைவு ஏற்பட்டுள்ளதென அவதானிக்க முடியுமான தரவுகள் காணுகின்றவிடத்து
- ஆணையாளர் சபை உள்ளூர் அதிகார சபைக்கு வழங்கிய கடன் தொடர்பாக எல்லைகள் விதிக்கப்பட்டுள்ளவிடத்து

- தனிதனியாக மதிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள்
  உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் ஒவ்வொரு தனி தனி முக்கியமான கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகளின் பொருட்டு வெவ்வேறான அடிப்படையில் பொருத்தமான கொடுப்பனவுகளை தீர்மானிக்கின்றது. திட்டத்தில் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளின் அளவிற்கு எதிர்தரப்பின் வியாபார திட்டத்தில் நிலைபேறுடன் கூடிய தன்மை, அது நிதிசார் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளவிடத்து செயலாற்றுகையை விருத்தி செய்வதற்குள்ள ஆற்றல், எதிர்வு கூறப்பட்ட கிடைக்கப்பெறுதல்கள் மற்றும் எதிர்பார்கக்ப்பட்ட செலவினங்கள் காணரமாக வங்குரோத்து நிலை ஏற்படுவதற்குள்ளவிடத்து, வேறு நிதிசார் உதவிக்குள்ள வாய்ப்பு, பணமாக்க கூடியதான பிணைகளின் பெறுமதி மற்றும் எதிர் பார்க்கப்பட்ட நிதிக் கூற்றில் காலம் உள்ளடக்குதல் ஆகியவற்றை கவனத்தில் கொள்ளப்படும். முன்கூட்டியே கூற இயலாத நிலை காரணமாக மிக கவனமான நிலை கோராவிடின் ஒவ்வொரு பதிவு செய்யும் திகதியிலும் மதிப்பிறக்க இழப்புக்கான கொடுப்பனவு மதிப்பிடப்படும்.

உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் முகாமைத்துவத்தினால் 10 மில்லியன் ரூபாவிலான உட்பிரவேச எல்லை தீர்மானிக்கப்படுகிறது.

**கூட்டாக மதிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள்**

வலுக்குறை இழப்புகளாக மேற்கொள்ளவில்லையனெ அடையாளம் காணப்படும், மற்றும் வெவ்வேறாக மதிப்பிடப்பட்ட, வெவ்வேறாக முக்கியமல்லாத நட்டங்கள் மற்றும் கடன் பொருட்டு கூட்டாக கொடுப்பனவுகள் மதிப்பிடப்படும். மொத்தமாக வலுக்குறை இழப்புகளின் பொருட்டு ஐந்தொகை திகதியில் கடன்தீர்ப்பு கிரயத்திற்கு கடனாளிகளின் பொருட்டு 1% ஆன கொடுப்பனவு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**கடன்தீர்ப்பு கிரயத்திற்கு முன்கொண்டுவந்த நிதிசார் சொத்துக்கள்**

கடன்தீர்ப்பு கிரயத்திற்கு முன்கொண்டு வரப்பட்ட நிதிசார் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளுமிடத்து, வெவ்வேறாக முக்கியமாகும் நிதிசார் சொத்துக்களின் பொருட்டு வெவ்வேறாக வலுக்குறை உள்ளதா இல்லாவிட்டால் வெவ்வேறாக முக்கியமல்லாத நிதிசார் சொத்துக்களின் பொருட்டு தொகுதியாக வலுக்குறை உள்ளதா, வலிமையான சாட்சிகள் உள்ளதா, என்பது தொடர்பாக நிதியம் முதலாவதாக மதிப்பீடு செய்யும். ஏதேனுமொரு வகையில் நிதியம் வெவ்வேறாக மதிப்பிடப்பட்ட நிதி சொத்துக்கள் தொடர்பில் வலுக்குறை உள்ளவிடத்து, வலிமையான சாட்சிகள் இல்லையென நிதியம் தீர்மானித்தால், அது முக்கியமானாலும் முக்கியமாகாவிட்டாலும் அதற்கு சமமான கடன் வருமுன் இழப்பு நிலை அம்சங்கள் உள்ள, நிதிசார் சொத்துக்களின் தொகுதியில் சொத்துக்களை உள்ளடக்கப்படுவதுடன், வலுக்குறை தொகுதியாக மதிப்பிடப்படும்.

ஏதேனுமொரு வகையில் வலுக்குறை ஏற்பட்டுள்ளது என்பதற்கு வலிமையான சாட்சிகள் இருந்தால் நட்டத்தின் அளவு சொத்துக்களின் முன்கொண்டு வரப்பட்டு, பெறுமதி மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதி ஓட்டக் கூற்றில் தற்கால பெறுமதிகளுக்கிடையில் வேறுபாடாக கருதப்படும். (இதுவரை ஏற்படாத எதிர்காலத்தில் எதிர் பார்க்கப்படும் கடன் நட்டங்கள் தவிர்ந்த) நிதி சொத்துக்களின் உரிய பயனுள்ள வட்டி விகிதாசாரத்திற்க மதிப்பிடப்பட்ட நிதிக் கூற்றில் தற்கால பெறுமதி வட்டியாக கருதப்படும்.

ii. **நிதிசார் பொறுப்புகள்**

இலங்கை பொதுக் கணக்கீட்டு நியமங்கள் 39 இன்கீழான விடயவெல்லையில் நிதிசார் பொறுப்புகள் வட்டியுடன் கூடிய கடன் வழங்குதல் மற்றும் கடன் எடுத்தல் என்ற வகையில் பொருத்தமானவாறு வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகளாக வகைப்படுத்தப்படும். நிதியம் ஆரம்ப சந்தர்ப்பத்தில் அடையாளம்காணும்போது தமது நிதிசார் பொறுப்புகளை வகைப்படுத்தலுக்கு உட்படுத்தும் முறையை தீர்மானிக்கின்றது. ண

பொறுப்பின் உடன்படிக்கையுடன்கூடிய ஒதுக்கீட்டில் பங்குதாரராக நிதியம் ஆனவுடன், நிதியம் நிதிசார் சொத்துக்களை அடையாளம் காணுவதுடன், நிதிசார் பொறுப்புகளின் வரைவிலக்கணம்படி உடன்படிக்கையுடன்கூடிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோகக்த்தின் ஊடாக சென்று நிதிசார் பொறுப்புகள் மற்றும் ஏனைய நிதிசார் பொறுப்புகள் என்று வகைப்படுத்தப்படும்.

**நிதிசார் சொத்துக்களை மீண்டும் அடையாம் காணுதல்**

பொறுப்புகளின்கீழ் உள்ள பிணைப்புகளை விடுவித்தல், இரத்தச் செய்தல் அல்லது காலம் கடந்திருத்தல்மீது நிதிசார் பொறுப்புகளை மீண்டும் அடையாளம் காணப்படும். தெளிவாக மாற்றமடைந்த நிபந்தனைகளின்மீது இல்லாவிட்டால் தற்போதுள்ள பொறுப்புகளின் நிபந்தனைகளை நவீனமயப்படுத்துவதன்மீது ஒரே கடன்கொடுப்பவரிடமிருந்து எடுத்த பிரிதொரு கடன் மூலம் தற்போதுள்ள நிதிசார் பொறுப்புகளை மாற்றுகையில் அவ்வாறான நவீனமயப்படுத்தலின்மூலம் மேற்கொள்கின்ற பரிமாற்றுதலை, உரியவாறு பொறுப்பினை மீண்டும் அடையாளம் காணப்படுவதாக கருதப்படும். ஆரம்ப நிதிசார் பொறுப்பின் முன்கொண்டு வந்த பெறுமதி மற்றும் செலுத்துகின்ற மறுபயன் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும்.

### iii. நியாயமான பெறுமதியை அளவிடல்

சந்தையில் பங்குபற்றுபவர்களுக்கிடையில் மதிப்பிடப்படும் திகதியில் முறையான கொடுக்கல் வாங்களில் சொத்தினை விற்பனை செய்வதற்கு கிடைக்கப்பெறும் விலை அல்லது பொறுப்புகளை கையளிப்பதற்கு செலுத்தபப்டும் விலை நியாயமான பெறுமதியாக கருதப்படும். குறித்த நியயாமான நியாயமான பெறுமதி விற்பனை அல்லது பொறுப்பு என்பனவாகும்.

- சொத்து அல்லது பொறுப்புக்கு ஏற்புடையதான பிரதான சந்தை அல்லது
- பிரதான சந்தையல்லாத நிலைமையில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கு மிகவும் நன்மைபயக்கும் சந்தை ஆகிய இரண்டில் ஒன்று நடைபெறுகின்றது என்ற அனுமானத்தை அடிப்படையாகக் கொள்ளப்படும். இதன்போது பிரதான அல்லது மிக நன்மை பயக்கும் சந்தை என்பது நிதியத்திற்கு அணுகுவதற்கு முடியுமான ஒன்றாதல் கட்டாயமாகும்

சொத்துக்கள் அல்லது பொறுப்புகளை விலைப்படுத்தும்போது, சந்தையில் பங்குபற்றுபவர்கள் மிக சிறந்த பொருளாதார நன்மையினுள் நடவடிக்கை மேற்கொள்கின்றார்கள் என்ற அனுமானிப்புமீது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நியாயமான பெறுமதி மதிப்பிடப்படும். நிதி சொத்துக்கள் அல்லாத நியாயமான பெறுமதி மதிப்பிடும்போது சொத்துக்களின் ஆகக்கூடியதும், சிறந்த முறையில் பயன்படுத்தவதன்மூலம் இல்லாவிட்டால் அது அதிகூடிய மற்றும் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு முடியுமான மற்றுமொரு சந்தையில் பங்குபற்றுபவர்களுக்கு விற்பனை செய்வதன்மூலம் சந்தையில் பங்குபற்றுபவர்களுக்கு பொருளாதார நலன்கள் உருவாக்குவதற்குள்ள ஆற்றல் கவனத்தில் கொள்ளப்படும்.

அதனை அவதானிக்க முடியுமான உள்ளீடுகளை அதிகரிக்கப்பட்டு மற்றும் அவதானிக்க முடியாத உள்ளீடுகளை குறைத்து நிதியம் நியாயமான பெறுமதியினை மதிப்பிடும் பொருட்டு போதியளவு தரவுகள் உள்ளதும் தற்போதுள்ள நிலைமையில் பொருத்தமான மதிப்பீட்டு தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்துகின்றது.

நிதி கூற்றுகளில் நியாயமான பெறுமதியினை மதிப்பிடல் அல்லது வெளிப்படுத்திக்கொள்ளும், எல்லா சொத்துக்கள் மற்றும பொறுப்புகள் பொதுவாக நியாயமான பெறுமதிக்கு மதிப்பிடுவதற்காக ஆகக்குறைந்த உள்ளீடுகளின் மட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு, நியாயமான பெறுமதி தொடர்பான படிநிலை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.

- மட்டம் 1 – பிரத்தியேக சொத்துக்கள் அல்லது பொறுப்புகளுக்கான முனைப்பான சந்தையில் முன்வைக்கப்படும் (சீராக்கப்படாத) விலை கணக்குகள்

- மட்டம் 12 – நேரடியாக அல்லது நேரடியற்று அவதானிக்க முடியுமான நியாயமான பெறுமதியினை அளவையிடுவதற்கு முக்கியமான ஆகக்குறைந்த மட்டத்திலான உள்ளீடுகளை மதிப்பிடும் தொழில்நுட்ப முறைகள்

- மட்டம் 1 3 நியாயமான பெறுமதியை வெளிப்படுத்திக்கொள்ளும் பணிக்காக அவதானிக்க இயலாத நியாயமான பெறுமதி மதிப்பிடலுக்கு முக்கியமான, ஆகக் குறைந்த மட்டத்திலான உள்ளீடுகளுக்கு மதிப்பீட்டு தொழில்நுட்ப முறைகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் இயல்பு, சட்டத்துடனான அம்சங்கள், மற்றும் இடர்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்டவாறு நியாயமான பெறுமதி தொடர்பான படிநிலை மட்டத்தின் மீதிருந்து, நிதியம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வகுப்பினை தீர்மானிக்கின்றது. நியாயமான பெறுமதி மதிப்பிடப்படும் முதலீடுகளின் சொத்துக்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற இரண்டிற்கும் மீண்டுவரும் நியாயமான பெறுமதிக்காக நிதியத்தின் ஆணையாளர் சபையின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் என்பவற்றால் தீர்மானிக்கப்படும்.

முக்கியமான சொத்துக்களை மதிப்பிடுவதற்கு வெளியக மதிப்பீட்டு நிபுணர்களை ஈடுபடுத்தப்படும். ஆணையாளர் சபையின் நிதியத்தின் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடப்பட்டு அவர்களின் அனுமதி பெற்றுக்கொண்டதன் பின்னர் வருடாந்தம் குறித்த நிபணத்துவ அறிவினைக் கொண்ட வெளியக மதிப்பீட்டாளர்களின் தலையீடு தொடர்பாக தீர்மானிக்கப்படும். சந்தை தொடர்பான அறிவு, வரவேற்பு, சுயாதீனம், தொழில்சார் தரங்கள் பேணப்படுகின்றதா போன்ற விடயங்கள் தெரிவு செய்யும் தேர்வு முறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வெளியக மதிப்பீட்டு நிபுணர்களுடன் கலந்துரையாடிய பின்னர் ஆணையாளர் சபை ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் எந்த வகையிலான தொழில்நுட்ப முறைகள் மற்றும் உள்ளீடுகள் பயன்படுத்தப்படுகின்றது என்பது தீர்மானிக்கப்படும்.
ஆணையாளர் சபை ஒவ்வொரு பதிவுகளின்போதும் நிதியத்தின் கணக்கீட்டு கொள்கைகளின்படி மீண்டும் அளவிடலுக்கு அல்லது மீண்டும் மதிப்பிடுவதற்கு தேவையான சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் அசைவுகளை பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. ஏனைய ஏற்புடைய ஆவணங்கள் மற்றும் உடன்படிக்கைகள் மதிப்பீடுகளின் கணக்காய்விற்குள்ள தகவல்களுடன் இணங்கப்பட்டு, குறித்த ஆய்விற்கு ஆணையாளர் சபையின் புதிய மதிப்பீடுகளை பயன்படுத்தி பிரதான உள்ளீடுகளை ஒப்பாய்வு செய்யப்படுகின்றது. நிதியத்தின் வெளியக மதிப்பீட்டு நிபுணர்களுடன் இணைந்து நிதியத்தின் ஆணையாளர் சபை, ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் நியாயமானதென்பதை தீர்மானிக்கும் பொருட்டு வெளியக வளமூலங்களின் மூலம் ஒவ்வொரு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நியாயமான பெறுமதி ஒப்பிடப்படும்.

நியாயமான பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்களின் பொருட்டு நிதியத்தின் சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் தன்மை, சட்டத்துடனான அம்சங்கள், வருமுன் இடர் நிலை மற்றும் மேற்படி விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்வாற நியாயமான பெறுமதி தொடர்பான படிநிலை மட்டத்தை அடிப்படையாகக்கொண்டு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வகுப்பினை தீர்மானிக்கப்படும்.

## 2.8.12. வருமானங்களை அடையாளம் காணுதல்

நிதியத்திற்கு பொருளாதார நன்மைகள் கிடைக்கப்பெறுவதற்கான வாய்ப்பு உள்ளதா என்பதனை கண்டறிவதற்கும், செலுத்தப்படும் சந்தர்ப்பத்தை கவனத்தில் கொள்ளாது வருமானம் மற்றும் ஏற்படும் அல்லது ஏற்படக்கூடிய அதனுடன் சார்ந்த கிரயத்தை, நம்பிக்கையான வகையில் கணக்கிட முடியுமா என்பதை தீர்மானிக்கும் அளவில் வருமானம் அடையாளம் காணப்படும், வருமானம் அடையாளம் காணப்படும் பணியின் பொருட்டு விசேட தேர்வு முறைகள் பயன்படுத்தப்படும்.

### அ) வட்டி வருமானம் மற்றும் செலவினம்

சேர்ந்து வரும் அடிப்படையில் மற்றும் பயனுள்ள வட்டி முறையை பயன்படுத்தி வட்டி வருமானத்தையும் செலவினத்தையும் விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும். பயனுள்ள வட்டி விகிதாசாரம் என்பது நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை முன்கொண்டு வரப்பட்ட பெறுமதிக்கு, நிதிசார் சொத்துக்கள் அல்லது பொறுப்பில் எதிர் பார்க்கப்பட்ட ஆயுட் காலத்தில் மதிப்பிடப்பட்ட எதிர்கால பணம் செலுத்தல் மற்றும் கிடைக்கப்பெறுதலை உரியவாறு உறுதியாக சலுகையாக்கும் விகிதாசாரமாகும். (இல்லாவிட்டால் ஏற்புடையவாறு குறுகிய காலம்) பயனுள்ள வட்டி விகிதாசாரம் கணக்கிடும் நிதி எதிர்கால கடன் நட்டமல்ல நிதிசார் உபகரணங்களின் எல்லா உடன்படிக்கை நிபந்தனைகளையும் கவனத்தில்கொண்டு எதிர்கால நிதி ஓட்டங்களை மதிப்பிடப்படும்.

இவ்வாறு பயனுள்ள வட்டி விகிதாசாரத்தை கணிப்பிடுவதற்கு அல்லது கிடைக்கப்பெற்ற எல்லா கட்டணங்கள் மற்றும் புள்ளிகள் உள்ளடக்கப்படுவதுடன், அவை பயனுள்ள வட்டி விகிதாசாரத்தில் இணைந்த பகுதியாகும். கொடுக்கல் வாங்கல் கிரயத்திற்கு நிதிசார் சொத்துக்கள் அல்லத பொறுப்புகளாக கையேற்பதற்கு அல்லது வழங்குவதற்கு நேரடியாக உடமையாக்கத்தக்க அதிகரிக்கும் செலவில் உள்ளடக்கப்படும்.

### ஆ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானங்கள் சேர்ந்து வரும் அடிப்படையில் கணக்கிடப்படும். குறித்த ஏனைய வருமானங்கள் என்பதற்கு அபராதம் மற்றும் தீர்க்கப்பட்ட நட்டங்கள் காரணமாக கிடைக்கப்பெற்ற வருமானங்கள், மூலதன அளிப்புகள், கடன்தீரப்புகள் மற்றும் எத்தகையதொரு தொழிற்பாடுகள் அல்லாத வருமானங்கள் உள்ளடக்கப்படும்.

## 2.8.13. செலவினங்களை அடையாளம் காணுதல்

ஏற்பட்டுள்ள கிரயம் மற்றும் விசேட வருமான வகைகளின் உழைப்புகளுக்கிடையில் நேரடி தொடர்பினை அடிப்படையாகக்கொண்டு செலவினை விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகிறது. வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் மற்றும் வினைத்திறனுடனான விகிதாசாரத்தில் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை பேணுவதால் ஏற்படும் செலவுகள் ஆண்டில் வருமானங்களை ஈட்டும்போது வருமானத்தில் அறவிடப்பட்டுள்ளது.

விரிவான வருமானக் கூற்று சமர்ப்பிக்கும் பணியின் பொருட்டு ஆணையாளர்களால் வகிக்கும் அபிப்பிராயம் யாதெனில், செலவு முறைமையின் தன்மைபடி நிதியத்தின் செயலாற்றுகை நியாயமாக சமர்ப்பிக்கப்படுகின்றதெனவும். ஆகையால் சமர்ப்பிக்கும் முறை ஏற்புடையதாக கொள்கின்றதெனவும் என்பதாகும். செலவு ஏற்பட்ட ஆண்டில் பழுதுபார்த்தல்கள் மற்றும் புதுபித்தல்கள் விரிவான வருமானக் கூற்றில் அறவிடப்படும்.

## 2.8.14. காசுப் பாய்ச்சல் கூற்று

இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் -7 (LKAS – 7), நிதி ஓட்டக் கூற்றின்படி நிதி ஓட்டக் கூற்றுகளை தயாரிக்கும்போது சுற்று முறை பயன்படுத்தி காசுப்பாய்ச்சல் கூற்றுகள் தயாரிக்கப்படும்

கையிருப்பு பணம், வங்கியில் உள்ள பணம் மற்றும் நியாயமான பெறுமதியில் குறிப்பிடத்தக்க இடர்நிலைகளின் வேறுபாடுகளுக்கு அமைவாக, மூன்று மாதங்களுக்கு குறைந்த முதிர்வடையும் நிலையில் உள்ள குறுகியகால பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு நிறுத்தி வைத்துக்கொள்ளும் அதிகூடிய திரவத் தன்மையிலான நிதிசார் சொத்துக்கள் என்பவற்றால் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் கொண்டிருக்கும்.

## 2.8.15. சம்பந்தப்பட்ட தரப்புகளின் வெளிப்படுத்தல்கள்

சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கையில் பொதுவான வியாபார நடவடிக்கைகளை பேணிச் செல்லப்படுகின்றது.

## 2.8.16. பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகள்

அனைவரும் அறிந்திருக்க வேண்டிய பொறுப்புகளின் அளவினை தீர்மானிக்கும்போது புரிந்துக்கொள்ள கூடியதான அனைத்து வருமன் இழப்புகளை கவனத்தில் கொள்ளப்படும். நிகழத்தக்க பொறுப்புகள் என்பது ஏற்படக்கூடியதான பொறுப்புகளாவதுடன், பொருளாதார நலன்களை மாற்றுவதற்கு இயலாத அல்லது நம்பிக்கையாக அளவிட முடியாதவிடத்து நிகழத்தக்க எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்கால பொறுப்புகள்மூலம் மட்டும் அவற்றின் தன்மை உறுதிப்படுத்தப்படுகிறது. நிகழத்தக்க பொறுப்புகள் நிதி நிலைமை கூற்றுகளில் அடையாளம் காணப்படாவிட்டாலும் அவற்றின் அளவிற்கு ஏற்ப வெளிப்படுத்தப்படுகின்றது.

.